அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

தி.மு.க. வார வெளியீடு.

ஒளி 2 : 25-1-63 வெள்ளி : கதிர்-45,46

காங்கிரஸ் சரணாகதி

பணக்காரர்கள் உண்டு பணம் தர, பராக்குக் கூறப் பத்திரிகைகள் உண்டு, மாடமாளிகைகள் பலவுண்டு, கோடீசுவரர்கள் ஏராளம், கொடி கட்டியாளும் கட்சி காங்கிரஸ்' அது, தோற்றது! நிற்கமுடியாமல், வீழ்ந்தது!!

வீராதி வீரர், வெற்றி வீரர், ரணக்களச் சூரர், ஆக்கவும் அழிக்கவும் வல்லமைப் படைத்தவர், மனம் வைத்தால் எதுவும் முடியும் அவரால், திட்டிய பெரியாரையே தீரா! உதாரா! என்று பாராட்டும்படி வைத்தவர், அவர் காணாத வெற்றியில்லை. தீர்க்காத பிரச்சனையில்லை, என்பார்கள்—காமராசரைப் பற்றி — அந்தத் தீரர் சாய்ந்தார்! தன்னாலும் முடியவில்லை என்று சரணாகதி அடைந்தார்!!

பதினைந்தாண்டுகளுக்கு மேலாக அரச கூடம், அங்கே பெரும அதிகார போதை, கிடைக்கும் சௌகரியங்கள், கேட்டால் ஓடி வரும் நிதி, வாய்மொழி சிந்தினால் வந்து சேருவோரின் பட்டியல், எல்லாம் பெற்றது தமிழ் நாடு காங்கிரஸ்! இது அனைத்தையும் அனுபவித்து மகிழ்கிறவர் காமராசர்!!

காங்கிரஸ் களங்கம் பெற்றது

காமராசரும், தோல்வித்தோடா பூண்டார்.

* * *

1963! ஜனவரி! 22-ம் நாள்!!

இந்தியத் துணைக்கண்ட வரலாற்றிலேயே குறிப்பிடக்கூடிய நாள்! எதிர்காலம் மறக்க முடியாத நாள்! உலக நூலின் ஏட்டில் கறையேற்றப்பட்ட நாள்! குடிநீர் கழுநீராக மாறிய நாள்! குயிலுருவிலிருந்த கோட்டான் வெளிப்பட்ட நாள்,!

கொடுமை வாதிகளின் மனநிலை, 'மகாத்மா' வளர்த்த கட்சியினருக்குண்டான நாள்! சந்தணம் சாக்கடையான நாள்! பெருந்தன்மைக்கு சமாதி எழுப்பிய நாள்!!

எழுந்தார் எ. கே. சென் எனும் டில்லி சட்ட அமைச்சர்! பாராளுமன்றத்திலே இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 19-வது பிரிவைத் திருத்த வேண்டும் என்கிற பிரரேபணையைக் கொணர்ந்தார், அன்று.

இந்திய அரசியல் சட்டம்!——இதுவரை, 15 தடவைகள் திருத்தப்பட்டதுண்டு ஆனால் 16-வது தடவையாக, இப்போது திருத்தப் படுவதற்கும் முன்பெல்லாம் திருத்தப்பட்டதற்கும் வேற்றுமைகள் அளவிலும் உருவிலும் ஏராளமுண்டு.

இப்போது திருத்தப்படும் 19—வது பிரிவு, சாதாரண ஒரு பிரிவல்ல! பாருக்கெல்லாம் சனநாயகம் பேசும் பண்டித நேரு அவர்களின் இதயம் போன்ற பிரிவாகும்.

விடுதலைக்குப் பாடுபட்ட ஆபிரகாம் லிங்கனும், அவருக்கு முன்னோடிகளான மாஜினியும் கரிபால்டியும் லாட்டிமரும் ரிட்லியும், அவர்களைப் போன்ற உலகைத் திருத்திய உத்தமர்கள் எல்லோரும் 'உயிர் நாடி' யென்று கருதிய பிரிவாகும். 'நினைத்ததைச் சொல்வேன்! அது என் உரிமை!! அதற்குத் தடை யென்றால் நீ கொடுக்கும் சட்டத்தைவிட, நீ தரும் நஞ்சு எனக்கு அமிர்தமாகும்'' என்று கிரேக்கப் பெரியார் சாக்ரடீஸ் உயிரைவிட்டது, அந்த உரிமை பறிபோனகாரணத்தால்தான்.

மனிதன் பிறந்தான்! பேசுவதற்குள்ள வாய் ஆண்டவன் கொடுத்தது என்கிறீர்கள்! அதே ஐயன்தான், மனிதனுக்கு ஆறறிவைக் கொடுத்ததாகச் சொல்கிறீர்கள்! அறிவைக் கொண்டு வாயால் பேசும் வாய்ப்பைப் பெற்றது மனித இனம் என்பதாலேயே மற்றைய உயிர் ராசிகளைவிட மேலானது என்கிறோம். அந்த மனிதன் விரும்பியதைப் பேசாமல் தடுப்பது கூடாது! பேச்சுரிமை வேண்டும்!!—என்று கேட்டவர்கள் பலர், போராடியவர்கள் ஏராளம், நெருப்புக்குள் பொசுக்கப் பட்டும்; தூக்கில் போட்டு தொங்கவிடப்பட்டும், இந்த உரிமைக்காகச் செத்தவர்கள் உண்டு.

உலகம் ஒப்பிய உரிமை பேச்சுரிமை! சனநாயகம் என்ற தேருக்கே அச்சாணிபேச்சுரிமை! அதனால்தான், அமெரிக்க நாட்டினர், தங்களது அரசியலமைப்பின் பொன்னான விதியென்று போற்றுகின்றனர் — பிரிட்டானியர், தமது எழுதப்படாத அரசியலமைப்பில் கண்ணைப்போல் காக்கின்றனர் அந்த விதியை!!

அந்த விதிதான், 19-வது விதி—அதன்படி, இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும் எல்லா மக்களும் அவரவர்கள் மனதில் தோன்றும் 'கருத்துக்களை' எந்தவிதத் தடையும் இல்லாமல் எடுத்துச் சொல்லும் உரிமை வழங்கப்பட்டது.

இதைக் காட்டியே, "எங்க சர்க்கார் எல்லோருக்கும் பேச்சுச் சுதந்திரம் கொடுத்திருக்கிறது' என்று இங்குள்ள காங்கிரஸ்காரர்கள் பீற்றிக்கொண்டார்கள் மனித உரிமை யென்று ஐக்கிய நாடுகள் சாசனம் வகுத்திருப்பதில் உள்ள முக்கியமான அம்சங்களில் ஒன்று பேச்சுரிமை! அந்த உரிமைக்குத்தான் அன்பர் ஏ.கே சென் இப்போது திருத்தம் கொணர்ந்திருக்கிறார்!!

"பிரிவினை கேட்கின்ற சக்திகள் நாட்டில் உள்ளன. அவைகள் அப்படிக் கேட்பது தவறு. அப்படிக் கேட்டால் அவர்களை தண்டிக்க வேண்டும். அப்படித் தண்டிக்க இன்றுள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தில்இடமில்லை. 19-வது விதியின் படி, சகலரும், தமது மனதில் பட்ட கருத்தை எடுத்துரைக்கும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அந்த உரிமையை ரத்து செய்து,பிரிவினைக் கேட்கின்றவர்களைத் தண்டிக்கின்ற அதிகாரம் மாகாணங்களுக்கு அளிக்கின்ற ஒரு திருத்தத்தை 19-வது பிரிவில் சேர்க்க வேண்டும்'' — இதுதான் சட்ட அமைச்சர் எ. கே. சென் அவர்களின் வாதமாகும்!

"பேச்சுரிமை என்பது சன

(2—ம் பக்கம் பார்க்க)

ஜீவா மறைந்தார்!

நம்பமுடியவில்லை——நினைக்க இயலவில்லை—எண்ணும் போதே இதயம் குலுங்குகிறது—'எப்பேற்பட்ட உருவம், எத்தகைய குரல் எத்தனையாண்டுகளாகப் பொது வாழ்க்கையில் உழன்றவர், இனி அவரை நாம் காணமுடியாது, அவர் குரலைத் தமிழகம் கேட்காது அவர் போய்விட்டாா! சாவு சாகாத தமிழரான ஜீவானந்தம் அவர்களை நம்மிடையே யிருந்துகொண்டுபோய்விட்டது!!

சுயமரியாதை இயக்கத்தின் பழைய தூண்களில் ஒருவர் என்கிற பாசமும், பழகு தமிழ்ப் பண்பாளர் என்பதனுல் உண்டான மதிப்பும், நமக்கெல்லாம் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களிலேயே ஜீவா அவர்களிடம தனியானதோர் பற்றை உண்டாக்கும் அவரும் அதேபோல,நம் போன்ற இளைஞர்களிடம் வாஞ்சையும் அன்பும் காட்டிவந்தார்.

கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களில் சிலர் எப்போதும் எதிலும் 'பூர்ஷ்வா'க் குணம் கண்டு குறை சொல்வார்கள். எழுதுகின்ற எழுத்து பேசுகின்ற நடையில் கூட இந்த 'பூர்ஷ்வா'க் குணம் இருப்பதாகச் சொல்லி வெறுப்பதுண்டு. ஆனுல் அவர்களுக்கு எல்லாம் அறிவுரை கூறும் பழகு தமிழ் ஆலயமாக விளங்கியவர் ஜீவா! அவர் தீட்டிய கவிதைகளில் வீரம் மிதக்கும், அதோடு அழகு தமிழும் சதிராடும். வாயைத் திறந்து தமிழ்க் கவிதைகளைப் பாடும்போது, கூனனும் நிமிருவான்!!

தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சியைப் பொறுத்தளவில் அவர்களது தமிழ்ச் சின்னம் ஜீவா எனலாம். அதுமட்டுமல்ல, இங்கே, கம்யூனிஸ்டு இயக்கம் வேரூன்றக் காரணமே அவர் என்றுலும் தவறில்லை. கம்யூனிஸ்டுக் கட்சி என்றுலே 'ஜீவானந்தம்' என்கிற பெயரே கவனத்துக்கு வருகின்ற அளவுக்கு அக்கட்சிக்குத் தமிழ் நாட்டில் இடமும் பெயரும் ஏற்படுத்தித் தர பாடுபட்டார். அப்படிப்பட்ட ஒரு பெரியாரை இழந்தது, அக்கட்சிக்கு, ஈடு செய்யமுடியாத இழப்பாகும்.

ஜீவா அவர்களுக்கு மரியாதை செய்ய அவர் இன்று உயிரோடு இல்லை. எனவே அவர் வளர்த்தப் பொதுவாழ்க்கைக்கு நாம்எப்போதும் நமது மரியாதைகளைக் காட்டுவோமாக!

அவருடைய மறைவால் துயருறும் தமிழ் நாடு கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் ஜீவாவுடைய குடும்பத்தாருக்கும் நம்முடைய மனமார்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஜீவாவைப் போன்ற நல்லவர்கள், வல்லவர்கள் பொதுவாழ்க்கையில் வெறுப்பை வளர்க்காமலும் வழ முடியும் என்று காட்டுகின்றவர்கன், மலர்வார்களாக!

—:o:—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாயகத்தின் முக்கிய அங்கமாகும் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய எண்ணங்களை இந்த சனநாயக உரிமையின் அடிப்படையிலே நாட்டில் எடுததுச் சொல்லி வருகிறது. நாங்கள் சொல்வதைத் தவறு என்று கண்டிக்கும் உரிமையும் காங்கிரஸ்காரர்களுக்கு இருக்கிறது. இப்படி பொதுமேடையிலே விவாதிக்கப்பட்டு, முடிவுகட்ட வேண்டிய ஒரு பிரச்சினைக்குக் கொலு மண்டபத்திலே ஏன் கொடிய சட்டம் கொண்டுவருகிறீர்கள்? இது சனநாயகமா! சனநாயகத்தின் பேரொளி யென்று பண்டித நேரு அவர்களை நாங்கள் மதிக்கின்றோம்! இந்தச் சட்டத்தைப் பற்றி அவர்கள் மனநிலை யென்ன,அவர்கள் என்ன சொல்கிறுர்கள்?''— என்று நாஞ்சில் மனோகரன், எழுந்து கேட்டிருக்கிறுர் பார்லிமெண்டில்.

"ஆண்டவன் ஏன் வாயடைத்துப் போய்விட்டார் தெரியுமா? அவருடைய சீடகோடிகள் செயகிற அட்டகாசங்களைப் பார்த்துச் சகிக்க முடியாமல்!'' என்று சொல்லுவார்கள். அதேபோல பண்டித நேரு அவர்களுக்கும் அவரது சீடகோடிகள் செய்கிற வேகமான காரியங்களைக் கண்டு வேதனை போலும்! வாய் திறக்கவில்லை!!

* - *

* எஸ். என். திவிவேதி (ஒரிசா பி. எஸ். பி) பேசும்போது ஒருமைப் பாட்டுக்கு ஆபத்து உள்நாட்டில் விசுவாசத்தோடு பாடுபடும் கட்சிகளால் இல்லை. வெளிநாட்டுக்கு விசுவாசம் காட்டி நாட்டுக்கு விசுவாசம் காட்டி நடக்கும் கம்யூனிஸ்டுக் கட்சி போன்றவைகளால்தான இருக்கிறது என்ருர்.

* கே' கே. சர்மா (ஐ. மா, காங்) பேசுகையில் சமூக எண்ணவியல்களில் தக்கதொரு சூழ்நிலையை உண்டுபண்ணுமல இதைப் போன்ற சட்டங்கள் எத்தனை வந்தாலும் பயனில்லை யென்ருர்.

* ஜி ஜி. ஸ்வெல் (அசாம் சுயேச்சை) சீனுக்காரன் படையெடுத்திருக்கிற இச்சமயத்தில் உள்நாட்டுப் பிரச்சினைகளை ஏன் பெரிதுபடுத்துகிறீர்கள் என்று கேட்டார். பதினைந்தாண்டுகளில் பலமான தேசீய உணர்வை உண்டுபண்ண நீங்கள் தவறிவிட்டீர்கள் என்பதையே இச்சட்டம் உணர்த்துகிறது என்ருர்.

* மகாவீர்தியாகி (ஐ. மா, காங்) பேசுகையில் மனோகரனுடையப் பேச்சில் உள்ள அம்சங்களைப் பாராட்டினுர். வெறும் சடடங்களால் மட்டும் எந்த வித உளப்பாங்கும் மாறிவிடாது என்பதாக விளக்கினுர்.

* பி.என்-மண்டல்(பீகார் சோஷி] பலமாகக் கண்டித்துப் பேசுகையில் இப்படிப்பட்டச் சட்டங்கள் மக்களுடைய அடிப்படைஉரிமைகளைப் பாதிக்கின்றன என்ருர். யூனியனுக்குக கடடுப்பட்டுத் தனி ராஜ்யமாக அமைந்து வாழவிரும்புகின்றஉரிமைமக்களுக்கு இருக்க வேண்டும் என்ருர். மககளுக்காக நாமா, நமக்காக மக்களா என்று கேட்டார்.

மற்றும் கிழக்குப் பஞ்சாபைச் சார்ந்த சர்மா, மேற்கு வங்கத்தைச் சேர்ந்த பட்டாச்சார்ஜி முதலியோரும் பேசியிருக்கின்றனர்!!

திராவிட முன்னேற்றக் கழகம் பற்றி அகில இந்தியாவும் பாலிமெண்டில அன்றைய தினம் பேசியிருக்கிறது.

பெரியார் அவர்களால் 'கண்ணீர்த் துளிகள்' என்று இன்னமும் ஏளனமாக அழைககப்படுகின்ற ஒரு கட்சியைப் பற்றி இந்தியப் பாராளு மன்றமே கூடியமர்ந்து ஆலோசித்து, அரசியலமைப்பைத் திருத்துகிறது.

அண்ணுதுரை, என்னப்பா, பெரிய ஆளா? எலெக்ஷனில் எப்படியாவது ஜெயிககாமல் செய்தால் தீர்ந்தான். அவன் கட்சி பெரிய கட்சியோ'!—என்று இளக்காரம் பேசிய இங்குள்ள பிரமுகர்கள் மிக மிக சாதாரணமான, சாமான்யமான அண்ணுதுரையின் கட்சி

(8-ம் பக்கம் பார்க்க)

-விற்பனையாளர்களுக்கு-

கடந்த 18-ந் தேதி அறப்போர் இதழ் கிடைக்கவில்லை என்று, விற்பனையாளர்கள் கடிதம் எழுதுகின்றனர்.

அறப்போர் அலுவலகத்தார்களுக்கு, பொங்கல் விடுமுறையின்காரணமாக கடந்த 18-ந் தேதி இதழ் வெளிவரவில்லை.

அதுகுறித்து இனி கடிதம்எழுத வேண்டாமென தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகி

ஆத்திரத்தால் பொங்கிக் கொண்டிருந்த பாரிசுக்குப் போய் அந்த மக்களைச் சந்திக்க புறப் பட்டான் லூயி! அவனுடைய வீரம் பாராட்டப்பட வேண்டியது தான். புறப்படுமுன் பாதுகாப் பாகத் தன்னுடைய சொத்துக் களை "வில்" எழுதி வைக்கவும் தயங்கவில்லை. பாரிசுக்கு வந்து, அங்குள்ள அரண்மனையில், மக் களின் பிரதிநிதிகளைச் சந்தித் தான. மனமுருக அவர்களுடைய குறைகளைக் கேட்டான். தன்னு டைய கம்பீரமான தொப்பிக்குப் பதில் ஏழைகளுடைய கொடிச் சின்னம் கொண்ட தொப்பியைக் கூட அணிந்து கொண்டான்! "ஆகா! ராஜா என்ருல் நம்ம ராஜா!" என்று மக்கள் எண்ணு களிலே புதியதொரு உற்சாகம் பூத்தது! கையிலே ஏரும், சுத்தி யலும், இரும்புக் கருவிகளும் தான் இருந்தனவென்ருலும் வீறு கொண்ட வேங்கைகள் போல் விண்ணதிர முழக்கமிட்டுக் கிளம் பினர் விவசாயிகள்!!

பிரபுக்களுடைய கோட்டை போன்ற மாளிகைகள் தாக்கப் பட்டன. தகர்க்கப்பட்டன. அகப் பட்டோரெல்லாம் அடித்து நொறுக்கப்பட்டனர். "சீமானே இவன்! போடு, ஒருபோடு!" "ஓகோ! இவன்தான் அவனுடைய மனைவியோ. அழுகிருேம் அரை வயிற்றுப் பசிக்கு. அலங்கார ஆடை இவளுக்கென்ன கேடு. போடு, இன்னொரு போடு!", "இதெல்லாம் பிரபுவின் வாரிசு களோ! பிஞ்சாக யிருக்கின்ற னவே யென்று யோசிக்கிறீர்கள். பாம்புக் குட்டிகள்! நாளைக்கு இவையும் அப்பனைப்போல்அடங் போது, வெர்சேல்ஸ் நகரிலிருந்த பிரபுக்கள் சும்மாயில்லை, இருக்க விடுமா? கடைசி வரையில்

"ரொட்டி! ரொட்டி! ரொட்டி!

மான் விழிகளில் கனல்

மதுர இதழ்களில் எரிமலை"

கையில் கிடைத்தது துரும்பானு லும் அதைக் கொண்டு தப்பிப் பிழைக்கத்தானே பிரபுத்துவம் 'வையத்' துவங்கின! 'என்ன யிருந்தாலும் நம்ம ராஜாவல் லவோ?'' என்றவர்கள், "என்ன இருந்தாலும் அந்தப் புத்தி போகுமோ?'' என்ருர்கள்! சக்க ரம் மறுபடியும் சுழல ஆரம்பித் தது.

கின்றளவுக்கு ஒரு சூழ்நிலையை உருவாக்கி விட்டு, மறுபடியும் திரும்பினுன் வெர்சேல்சுக்கு. மக் கள், "வாழ்க! வாழ்க எம் அர சர்!!" என்று வாழ்த்தியபடியே வழியனுப்பி வைத்தனர்.

பாரிசுக்கு 'விஜயம்' செய்து எரியும் நெருப்பை அணைத்து விட்டதாக மன்னன் கருதினுனே யொழிய மக்கள் மன்றம் 'பாரிஸ்' பட்டணத்தில் மட்டுந்தானு இருந் தது? எத்தனை யெத்தனை கிரா மங்கள்! உள்ளூர்கள் இருந்தன. ஆங்காங்கேயிருந்த ஏழை மக்கள் ஆங்காங்குள்ள பிரபுக்களிடம் சிக்கிச் சீரழிந்து கொண்டுதானே யிருந்தனர் கோட்டைகள், சிறை கள், சித்ரவதைக் கூடங்கள் அந்தந்த பிரபுவின் வசதிக்கும் தன்மைக்கும் தக்கபடி ஒவ்வொரு இடத்திலும் இருந்தன!;

"பாஸ்டிலியே போயிற்று!" என்கிற தகவல் பிரான்சு முழு தும் பரவவே, "பெரிய சிறையே தூள் தூளான பிறகு இந்தச் சில் லரைச் சிறைகள் எந்த மூலை?" என்கிற எண்ணத்தைப் பரப் பிற்று. எனவே, ஒவ்வொரு பகுதி யிலும் வெகுண்டெழுந்த மக்கள், வெறிகொண்டு சிறைச்சாலைகளை நோக்கிப் பாய்ந்தார்கள். அவர் களின் எழுச்சியைத் தடுக்க, அங்கங்கும் நிறுத்தப்பட்டிருந்த அரசனின் பரிவாரங்களால் முடிய வில்லை. ஆத்திரமுற்றிருந்த குடி யானவர்கள், புலிகள் போலக் கிளம்பினர்! புழுதிபடிந்த கண் காப் பிடாரிகளாகும்! ஆதலால் அவைகளையும் பார்த்துப்போடு!" என்று போடு போடென்று போட் டுத் தள்ளிக் கொண்டிருந்தார் கள் மக்கள். இரத்தம் வழிந்தது! தலைகள் உருண்டன! மாட மாளிகைகள் மண்மேடுகளாயின! இதைக் கண்ட பிரபுக்கள், "ஏழைகள் ஊர்வலம் வருகிறது" என்று கேட்டதுமே குழந்தை குட்டிகளோடு எங்கேயாவது ஓடித் தப்புவது என்று முயற்சித் தனர். அதற்காக அவர்கள்பூண்ட மாறுவேடங்கள், எண்ணிறந் தன! பிரபுக்கள் பிச்சைக்கார வேடம் பூண்டார்கள்! சீமாட்டி கள் அங்காடிக்காரிகளானுர்கள்! எந்த ஏழைகளை இளக்காரமாக யெண்ணி இத்தனை நாளும் படாத பாடு படுத்தினுர்களோ அந்த ஏழைகளின் உருவத்தைப் போட்டுக் கொண்டதாலேயே அவர்கள் தப்ப முடிந்தது. அவர் கள் கோலாகலமாக யிருக்கவும் ஏழை உதவினுன்! கொல்லப் பட்டுச் சாகும்போதும்உதவிற்று ஏழையின் உருவம்!

உள்நாட்டிலே இப்படியொரு நிலை உருவாகிக் கொண்டிருந்த விரும்பும்! அரசனை தமது சொற் படி நடக்க வைக்க முயன்றனர். பாரிசுக்குப் போய், "வாழ்க மன் னன்!" என்ற வாழ்த்தோடுதிரும் பிய மன்னன், தன் தலைக்கு ஆபத்து வராது, அப்படி வந்தா லும் தப்பித்துக் கொள்ளலாம் என்றே நம்பினுன். பிரபுக்களோ மன்னன் திடமனதோடு ஏதாவது செய்யாவிட்டால் தீர்ந்து விடு வோம் என்று செபபினர், எங் தப் பக்கம் செல்வது என்று தெரி யாமல் விழித்தான் மன்னன்! "இந்த ஜனங்களைத் திருப்தி செய்துவிட்டுப் போவோமே..." என்று எண்ணுவான் ஒருசமயம். "பிளாண்டர்ஸ் மாகாணத்திலி ருக்கும் நமது படைகளைக் கொண்டுவந்து ஒருகை பார்க்க லாமே!" என்றுபிரபுக்கள் சொன் ஞல் அதையும் மறுக்காமல் சிரத் தையோடு கேட்டான். இப்படியே சில வாரங்கள் ஓடின!

ஆனுல் இங்கே நடக்கும் சதி கள், யோசனைகள் எல்லாம் ஒன் றுக்குப் பத்தாகப் பாரிசுக்கு எட்டிக் கொண்டிருந்தன. 'வாழ்க' போட்ட வாய்கள்,

அரங்கண்ணல்

அக்டோபர் முதல் நாள் மாலை நாடு இரணகளக் காடாக ஆகிக் கொண்டிருந்த அச்சமயத்தில் பிளாண்டர்சிலிருந்து தருவிக்கப் பட்ட படைத் தளபதிகளுக்கு, உள்ளூர்ப் படைத் தளபதிகள் ஒய்யாரமாக ஒருவிருந்து கொடுத் துக் கொண்டிருந்தனர். அவர்கள் நுழைந்தபோது அவர்களைத் திருப்தி செய்யும் என்று கருதி, புரட்சிக்காரர்களுடைய கொடி யொன்றைக் கிழித்து எறிந்த னர். இச்செய்தி பாரிசுக்கு எட்டி யது

ஏழைகளின் தலைவர்களுக்கு இனிப்புரை வழங்கியபடியே மன் னன் நம்மை யொழித்திட நய வஞ்சக நாடகமாடுகிருன் என் கிற எண்ணம் ஏற்பட்டது. அப் படித் தங்களை அரசன் மடக்கிவிட் டால், பிறகு என்ன நடக்கும் என் றெண்ண யெண்ண அவர்கள் திடமான முடிவுக்கு வந்தனர், "இருந்து அரசனுல் பறிக்கப்படும் உயிர், அவனை எதிர்த்துத்தான் போகட்டுமே!" என்று கருதி னர்.

புரட்சிகள் அரும்பும்போது அடுக்கடுக்காய் அதற்கேற்ற சூழ்நிலைகளும் உருவாகிக் கொண்டே யிருக்கும் போலும்! அதிருப்தி அனலும், ஆற்றுமை யும், துயரமும், சோகமும், சதி யும், சங்கடமும் இப்படியாக நாடே கலங்கிக் கொண்டிருந்த வேளையில், பாரிஸ் பட்டணத்தில் ரொட்டிப் பஞ்சம் ஏற்பட்டது.

கலவரமும் பயமும் உருவாகும் போது எப்படி உற்பத்தி ஒழுங்காக நடக்கும்? பாரிசிலே பஞ்சம்! ஆனல் வெர்சேல்ஸ் மாளிகையிலோ விருந்து! அதுவும் யாருக்கு? தங்களை அடக்குவதற்காகக் கொண்டு வரப்பட்டுள்ள படைத் தளபதிகளுக்கு!

எப்படியிருக்கும் இதைக் கேட்கும் ஏழைகளுக்கு? அக்டோபர் 5-ந்தேதி காலையில் பட்டினிப் பட்டாளம் மீண்டும் ஒருகை பார்ப்பதென முடிவு செய்தது. இச்சமயம் அவர்களோடு, கந்தலுடுத்திய கன்னியரும், கடைகளுக்குப் போய் வெறுங்கூடையோடுதிரும்பிய வீட்டரசிகளும் சேர்ந்து கொண்டனர்! முன்பு ஆண்கள் மட்டுமே கர்ச்சித்தனர், இப்போது மாதர்களும் எழுப்பலாயின கர்ச்சனை. "கொடு, ரொட்டி!" "ரொட்டி! ரொட்டி!" "ரொட்டி வேண்டுமெங்களுக்கு!" என்று கூக்குரல் எழுப்பியபடி பட்டினி ஊர்வலம் புறப்பட்டது.

"போவோம் வெர்சேல்ஸ்! பாரிசை வந்து பார்க்கட்டும் அரசன்!!" என்றான் ஒருவன்.

"பார்க்கட்டும், என்னடா! இழுத்துவந்து காட்டுவோம்!!" என்றான் இன்னெருவன்.

என்ன மாறுதல்! பார்க்கட்டும், இழுத்துவந்து காட்டுவோம்—இரு குரல்களுக்குமிடையிலிருக்கும் வேற்றுமையே சொல்லும் வேங்கையாகி விட்டது பிரெஞ்சு பூமியென்று!

* * *

டடடடா! டடடடா! டடடடா! என்று முரசு ஒலித்தபடியே செல்கிறாள் ஒரு பெண், கிழவியல்ல. பருவமலர்! காதல் பாடி, கட்டிலறையில் கிடக்க வேண்டிய வயதுள்ள வனிதா மலர், வந்துவிட்டாள் வீதிக்கு. வயிற்றுக் கொடுமை! அவளை ஒங்கியோங்கி அடிக்கச் சொல்லிற்று, முரசத்தை. கனிவு பேச வேண்டிய கண்களிலே கனல்! தேமதுரம் சிந்தும் இதழ்களிலே தீப்போன்ற சொற்கள்! அழகான கைகள் ஓங்கி,ஓங்கி 'ஒழிக! ஒழிக!' என்று கூவுகின்றன! 'வருக, வருக! வகைகோடுருஉ......டவன புறப்படு வெர்சேல்ஸ்! பொங்கி எழுக, வருக!'' என்று உரத்து முழக்கமிட்டாள் அவள். ஒரே ஒருத்திதான்! ஆனல் அவள் எழுப்பிய முரசொலி, பாரிசையே விழிக்கச் செய்தது. அவளுக்குப் பின்னல் பாரிஸ் பட்டணக் கடைகளுக்குச் சென்று வெறுங் கூடையுடன் திரும்பிய வீட்டரசிகள் எல்லாம் இருந்தனர்! அவர்களுக்குப் பின்னல் பல்லாயிரக்கணக்கான குடிசைவாழ் மக்கள், வந்தனர்!

இம்மாபெரும் அணிவகுப்பில் பெண்களைப் போல உடுத்துக் கொண்டுச் சில 'காலிகளும்' இருந்தனர். எங்குமே இப்படிப் பட்ட சில காலிகள் முளைப்பர் போலும்! அவர்கள் எதற்கும் தயாராக வந்தார்கள். யாராவது ஒரு பணக்காரனைப் பார்த்துவிட்டால் போதும், பாய்ந்து கடித்துத் துப்பி விடுவார்கள் அவர்கள். தமது வெறியைத் தீர்த்துக் கொள்ள கன்னியர் வேடமே பாதுகாப்பானது என்று கருதினர் போலும்.

"ரொட்டி! ரொட்டி! ரொட்டி!" என்று அத்தனை பேரும் கூவினர். ஆகா, எப்படியிருந்திருக்கும் அக்குரல்! எண்ணவே உடல் சிலிர்க்கிறது, அரசனல் பாதுகாப்புத் தளபதியாக நியமித்திருந்தலாவேயட்டேயால், இச்சட்ட விரோதமான கூட்டத்தைத் தடுக்க முடியவில்லை. ஒருவேளை அவனே கூட இதை விரும்பினுனே என்னவோ! ஏனெனில் குழம்பிய குட்டையில் அகப்பட்டவரைச் சுருட்டும் ஆசாமிதான் அவனும். கடைசி நேரத்தில் வெர்சேல்சுக்கு வந்து, இவனில்லாவிட்டால் ராஜாவை யாரும் காப்பாற்றி யிருக்க முடியாது என்று ஒரு 'ஸ்டண்ட்' அடிக்க முயற்சிப்பதாகவே எண்ணினர். ஏனெனில் அலங்காரமாக உடுத்திக் கொண்டு வெள்ளைப் புரவியொன்றில் அமர்ந்தபடி வீறுகொண்டு செல்லும் அக்கூட்டத்தின் பின்னே "டாக் டாக்" என்று சென்றுகொண்டிருந்தான் அவன்!!

(தொடரும்)

வயது கேட்ட வனிதை

ஆடம்பரமான ஒரு மாது ஒரு நாள் பேரறிஞர் பெர்னட் ஷாவிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

"மிஸ்டர் ஷா! எனக்கு என்ன வயதிருக்கும் என்று நினைக்கிறீர்கள்?"

ஷா, அந்த மாதை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, பற்களை பார்க்கும்போது உன் வயது 18 இருக்கும் என்றே நினைக்கிறேன்; கூந்தலோ 19 இருக்கலாம் என்று சொல்லுகிறது; ஆனல் உன் நடையும் பேச்சுமோ 14-க்கு மேல் இருக்க முடியாது என்று நினைக்கத்தான் தூண்டுகிறது'' என்றார்.

மகிழ்ந்துபோய் விட்டாள் அம்மாது! ஆனல் அதைத் தொடர்ந்து மேலும் விவரித்தார் ஷா, "அம்மா ஒவ்வொன்றையும் கூட்டிப்பார்த்தால் எத்தனை வருகிறது, 51 அல்லவா? அதுதான் உன் வயதாக இருக்கமுடியும் என்று நான் எண்ணுகிறேன்."

அறிஞர் அண்ணவும் கலைத்துறைப் பணியும்

இயல் இசை நாடகம் வல்ல கலைஞர்களிடத்தே அறிஞர் அண்ணு அவர்களுக்கு பற்றுதல் மிகவுண்டு. நாட்டுக்குத் தேவையான கருத்துக்களைப் பரப்புகின்ற கலைப்பணியில் எதிர்ப்புக்களைப் பெற்றுள்ளோர் எனில் அவர்களிடத்து தனிப்பரிவு காட்டுவதுண்டு. நுண் கலைகளின் பண்பையும் பயனையும் மற்றவர்களைக்காட்டிலும் அறிஞர் அண்ணு அவர்கள் நன்கு உணர்ந்திருப்பதே இதற்குக் காரணம்.

அடிமைத்தனம், அறியாமை, அநீதி, பஞ்சம் பட்டினிக் கொடுமைகளை கிட்டரிய பாக்கியமென ஏற்றுக்கொண்டு கூனிக்குறுகிக் கிடப்பது திராவிட சமுதாயம். இதனை விழிப்புற வைத்திட தகுதி வாய்ந்த பலர் தரமான முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டனர்.

தாய்மொழிப் பற்றும், தனது நாட்டன்பும், அறிவுச் சிறப்பும், அறப்பண்பும், பண்டைய பெருமையும், இன்றைய நிலைமையும், எடுத்துக் காட்டுகின்ற காவியம் கண்டனர். இலக்கியம் படைத்தனர்; பழம் நூல்களை புதுக்கினர் புதியன புனைந்தனர்; மேடையிலே பேசினர்; ஏடதிலே வரைந்தனர். இவற்றால் கொண்ட கருத்துக்கு வளமூட்ட முடிந்ததேயொழிய, தன்னை மறந்த பாமரமக்களைத்தட்டி எழுப்ப முடியவில்லை!

ப. கண்ணன்

இவற்றையெல்லாம் நன்குணர்ந்த அறிஞர் அண்ணு அவர்கள், சாதிக்க முடியாத துயிலெழுப்புப் பணியினைச் சாதித்துக் காட்டினர்கள் தமது பொன்னன நாடகங்கள் மூலமாகவும், நடத்திக் காட்டுவதன் மூலமாகவும்!

படித்தோரையும், பாமரரையும் ஒருங்கு திரட்டினர்கள். அவர்களுக்கு கலைகாட்டி, மக்கள் நிலைகாட்டி, கழுவாய் முறைகாட்டி சோர்ந்து கிடந்த நரம்புகளிலே தன்னுணர்வும் தன்மானமும் ஏற்றினர்கள். புதிய கருத்துக்கள் பொங்கி மலர்ந்தன. கருத்துரை நாடகக் கலையானது அறிஞர் அண்ணு அவர்களால் புதுப்பொலிவு பெற்றது. நடத்திய நடிகர்கள் இசைப்புலவர்கள் நற்கலைவாணர்கள் புதுப்புகழ் பெற்றனர். புதுமைகள் பூரித்தன. பொன்றின பழமைகள்! கலை கலைக்காகவே என்ற தத்துவ நிழலில் கலையை வஞ்சக வலையாக்கிச் சுவைஞர்களைப் பித்தர்களாக்கிச் சுரண்டிப் பிழைக்கும் எத்தர்கள் நெஞ்சம் கொதித்தனர்!

வாடிய பயிரையும் வானத்தையும் பார்த்துக்குமைந்த உழவனுக்கு மகிழ்வைத் தருகின்றபெரு மழையானது, கன்னக்கோலுடன் தனிவழி நடக்கின்ற கள்வனுக்கு மகிழ்வைத் தராதன்றே; மழையால் ஆறு பெருக்கெடுத்து அடுத்தவூர் செல்வதைத் தடுக்குமோ; அன்றிரவுத் தொழிலைக் கெடுக்குமோ என்று துடிப்பான் தூய்மையற்றவன். அதற்காக பெருமழை பெய்யாது நின்றுவிடுமோ? பெய்தது.

அறிஞர் அண்ணு அவர்களின் கலையுலகப் பணி, அடிமைத்தனத்தை முதலாக வைத்து, அறியாமை அநீதிகளைத் தருமநெறியென்று கலை மெருகுடன் காட்டிப் பிழைத்த கருத்துப் பகைவர்களைக் கதிகலங்க வைத்தது. கலையுரை நாடகங்களுக்கு மாறுபட்ட கருத்துரை நாடகங்கள் அறிஞர் அண்ணு அவர்களின் எழுத்து, நடிப்பு வன்மையால் ஏற்றமடைந்து மக்கள் மன்றத்தின் நல்லாதரவைப் பெற்று வந்தமையால் வெளிப்படையாகக் எதிர்க்கும் ஆற்றலைப் பகைவர்கள் இழந்தனர். மழைவிட்டும் துவானம் விடவில்லை.

கருத்துக்கு எதிராகக் கருத்துகளை நிறுத்துவதற்கு வக்குவகையற்றவர்கள் புரட்சி நாடகங்களை கண்டுமருட்சிய டைந்தனர். வயிறு எரிந்தனர். அறிஞர் அண்ணு அவர்களது நாடகங்களையும், கலை ஓவியங்களையும்; அவர்களின் அடி ஒற்றிச் செல்லுகின்ற தம்பிமார்களின் தன்மானப் படைப்புகளையும் பழித்தனர்; புறக்கணித்தனர் மேடைகளிலே தாக்கினர்; ஏடுகளிலே தூற்றினர்; விழித்த மக்கள் உறங்கவில்லை. எனவே ஏமாற்றமுடியவில்லை.

கருத்துரை நாடகங்களை நடத்துகின்ற தொழில்முறை நடிகர்களைப் பழிக்கவும், பெருமையினைக்குலைக்கவும், நடிக்கவும் பல வழிகளில் முயன்றனர். தோல்வியே கண்டனர். எனினும் நடிகருக்கு தொல்லைத் தருவதை இன்னமும் தொடர்கதையாகக் கொண்டிருக்கின்றனர்.

எதிர்ப்புகளைச் சமாளிக்க நமது கலைஞர்களுக்கு விழிப்புணர்ச்சி மிகத் தேவைப்படுகிறது சூழ்ச்சிகளையும் சதிகளையும்வெல்லுதற்குரிய சக்தியை வளர்க்க வேண்டும். வளர்த்து வருகின்றனர்.

தி. மு. கழகம் இன்று வலிவார்ந்த பெருமரமாகும். அதனுலேயே நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களின் நடிப்புத்துறை உழைப்பும் ஊதியமும், இதன் கடைக்காலின் கற்கலானதை மறந்திடலாமோ?

முத்தமிழ்க் கலைத்துறையிலே வித்தகர் பலர் இருக்கலாம்; விவேகியர் இருக்கலாம்; திறமையாளர் இருக்கின்றனர்; தீரர்கள் இருக்கின்றனர். ஆனல் முத்தமிழ்க் கலையினைக்கொண்டு கலைஞர்களை தழுவின்று ஒரு மாபெரும் இயக்கத்தை வளர்த்த மாமேதை; கருத்துக்களின் செழுஞ்சுடர்; தனிப்பெருந் தலைவர் இந்நிலவுலகின் அறிஞர் அண்ணு ஒருவர் தான் இருக்கிருர்கள்!

—0—

சந்தா விவரம்
ஆண்டு சந்தா ரூ ·00
6 மாத சந்தா ரூ 4-50
மூன்று மாத சந்த கிடையாது

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஆளத்தெரிகிறதா, மக்களை வாழவைக்க முடிகிறதா? என்று கேள்வி கேட்கப்படுகிறது. இவர்களோ அதிலே கண்ட தோல்விகளை மறைக்க மணியடித்துக் காட்டுகிறார்கள் கோயில் பூசாரி போல.

—அண்ணா

ஒளி - 2 கதிர் - 45 45 || வெள்ளி 25-1-63 || 8 பக்கம், 16 காசு

கிராமத் தொண்டர் படை!

நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் :1 வயதுக்கு மேற்பட்டு +0 வயதுக்குட்பட்டவர்களில் யாரார் சேருகின்றார்களோ அவர்களைக் கொண்டு 'கிராமத் தொண்டர் படை' யொன்று நிறுவ அரசு முடிவெடுத்திருக்கிறது! இந்த ஆண்டு குடியரசுத் தினமுதல் ஆங்காங்கும் இப்படை அமைக்கப்படுமெனவும் அறிகிறோம்.

உர்பத்தி யூனிட்—கிராமப் பாதுகாப்பு யூனிட்—கல்வி பயிற்சி யூனிட்—என்று இந்தப் படை பல பிரிவுகளாக இயங்கி, கிராமங்களில் இந்த நெருக்கடியான நேரத்தில் உற்பத்தி பெருகவும், பாதுகாப்பு உணர்ச்சி பரவவுமான செயல்களில் ஈடுபடும் என்றும் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு தொண்டருக்கும் 'பாட்ஜு'க்கள் கொடுககப்படுமென்றும், ஊரிலுள்ள பஞ்சாயத்துத் தலைவரே அவர் வட்டாரத்தில் தொண்டர் படைத் தலைவராக யிருப்பாரென்றும், சொல்லப்படுகிறது.

இந்த முயற்சியை நாம் வரவேற்கிறோம்! அதேசமயம் சகல கட்சிகளின் ஒத்துழைபபுகளோடும் இத்தொண்டர் படை அமைப்பதில், கவனமும் கருத்தும் செலுத்தப்படவேண்டும்.

நெருக்கடி நிலையைப் பயன் படுத்தி, அதனால் கிடைக்கும் அனுதாபத்தையும் வசதிகளையும் கொண்டு, தன் கட்சியைக் காப்பாற்றக் காங்கிரஸ் முயற்சிப்பதாக ஒரு கருத்து உலவிவருகிறது.

அது பலப்படாத வகையில், நல்லோரும் வலலோரும் விளங்கக் கூடிய ஒரு நல்ல அமைப்பாக இந்தத் தொண்டர் படை நிறுவப்படுமாக.

கழகத் தோழர்களும், முழுமனதோடு, பங்கேற்று தம்முடைய உணர்ச்சிகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்குவார்களாக.

அவசரத்தில்

பற்பல அவசரமான முடிவுகளும் யோசகனைளும் கிளம்பிக் கொண்டேயிருக்கின்றன! நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு பரபரப்போடும் விறுவிறுப்போடும் அவைகள் வருகின்றன!!

தேசமே சிக்கலிலிருக்கும்போது மற்றவைகளைப் பற்றி நாம் அதிக அக்கரை செலுத்த வேண்டிய அவசியம் இல்லையாயினும், சில விஷயங்களில் ஆய்ந்து அனுசரித்துச் செல்வது நல்லது.

எடுத்தார்க்கெல்லாம் ஆளாகி, பலபேருடைய ஆசைகளை நிறைவேற்றிப் பார்க்கும் சாலையாக ஆகியிருப்பது நாட்டின் கல்வித்துறையாகும். அதிக ஓய்வு முறைகளை விடுவதில்லை—டாக்டர்களுடைய படிப்புக் காலத்தைச் சுருக்குவது என்றெல்லாம் பல யோசனைகள் கூறப்படுகின்றன.

இதெல்லாம் அவசர முடிவுகளாக அமைதல் கூடாது! ஆய்ந்தோய்ந்து செயல்படுவார்களாக!!

—0—

'அறப்போர்'
அடுத்த இதழில்

கலைஞர் மு. க. வின்
தொடர் வரலாற்றுடன்

- அரசியல் கட்டுரைகள்
- வெளிநாட்டுக் கதைகள்
- கேள்வி பதில்

சனிக்கிழமைதோறும் உங்களிடம் வர ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்!

அறப்போர் சென்னை-18

தங்கத்துக்கு வந்த வம்பு !

தங்கம், தவிக்கிருள்! அவள் கையிலிருக்கும் சொத்தெல்லாம், அந்த இரண்டு வளையல்கள்தான் வீட்டில் பையனுக்கு டைபாய்டு! வீட்டுக்காரருக்கோ முதல் தேதிதான் சம்பளம்வரும்! டாக்டரோ, இருபது ரூபாய்க்கு மருந்து எழுதிக்கொடுத்திருக்கிருர். வளையலை எடுத்துக்கொண்டு வட்டிக்கடைக்குச் சென்ருலோ, முன்பு போலப் பணம் கொடுக்க மறுக்கிருர், மார்வாடி! உண்மையான தங்கத்தின விலை மளமளவென்று இறங்குவதால் உயிருள்ள தங்கத்துக்குப் பணம் தர அவர் சம்மதிக்க வில்லை. என்ன செய்வாள் அந்த ஏழைத்தாய்?

*

சார்! திடுதிப்புன்னு 14 காரட் தங்கத்திலேதான் நகைகள் எல்லாம் செய்து போட்டுக்கணும், அதிகக் காட்கூடாதுன்னு சர்க்கார் உத்திரவு போட்டுவிட்டதே, எங்களுக்குத் தொழில் நடக்காதே. யாரும் நகைசெயய மாட்டாங்களே, தொழிலில்லேன்னு எப்படி சார் எங்க குடும்பம் நடக்கிறது? இதுக்கு ஒரு வழி செய்யாமெ இபபடிச் சட்டம் போட்டுட்டாங்களே!

*

வேணும்! வேணும்!! நயமாகவும் பயமாவும் எத்தனை தடவை இருக்கிறதங்கத்தைக் கொடுத்து விட்டுக் கடன் பத்திரங்களை வாங்கிக்கோ வாங்கக்கோன்னு சர்க்கார் சொல்லிச்சு. கேட்டாங்களா? பதுக்கி வைக்கத்தானே பார்த்தாங்க! எத்தனைப் பணக்காரங்க பாளம் பாளமாத் தங்கத்தைவாங்கிப் பதுக்கி வைச்சிருக்காங்க தெரியுமா? எல்லாருக்கும் இப்பத்தான் புத்தி வந்திருக்கும். சரியான சமயத்திலே சர்க்கார் சரியான முடிவெடுத்திருக்காங்க!!

*

விமர்சனம்! உரையாடல்! கண்டனம்! சரியெனகிற ஆமோதிப்பு! அவலக் குரல்! - இப்படி, இன்று பல இடங்களிலிருந்தும் பிரச்னைப் பொருளாகி யிருக்கிறது தங்கம்.

இரும்பு, செம்பு, பித்தளையைப் போலத் தங்கமும் ஒரு உலோகந்தானென்ருலும் அதனுடைய பொலிவையும் கெடாத தன்மையையும் அருமையையும் கருதி உலக நாணய மதிப்பில் உயர்ந்த இடம் அதற்கு வழங்கப்பட்டது. ஒரு நாடு எவ்வளவு தங்கத்துக்கு அதிபதியாக யிருக்கிறதோ, அதை வைத்தே அந்த நாட்டின் செல்வ வளத்தைக் கண்சகிடுவதென்கிற முறையும் ஏற்பட்டது.

நோட்டுக்களாக அடித்துத்தள்ளினுலும் நயாபைசாக்களை அடித்து உதிர்த்தாலும், பாங்கியில் அதற்கு ஈடான தங்கம் இருந்தாகவேண்டும். அப்போதுதான் வெளிநாட்டுக்காரர்கள் அந்த நாட்டை நமபிவாணிபத் தொடாபு கொள்வார்கள்! ஏனெனில் நாட்டுக்குள் மட்டுமின்றி உலகத்திலுள்ள எல்லா நாடுகளுக்குமே "தங்கம்"தான் மதிப்புளள பொருள்!! தங்கம்தான், அளவுகோல்.

அத்தகைய தங்கத்தை வளம் கொழிக்கும் அமெரிக்கர் தாலிச்சரடு செய்தோ, தங்க ஓட்டியாணமாக்கியோ, எட்டு வடச் சங்கிலிகளாக்கியோ, போட்டு அணிந்து மகிழ்வதில்லை! இங்கிலாந்து பிரான்ஸ் ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளில் கூடப் பெண்கள் தங்கத்தை ஆபரணங்களாக்கி அணிவதில்லை! ஆனுல் இங்குதான், "அம்புஜத்துக்கிட்டே 50 சவரனுச்கு நகையிருக்கு! கோகிலாக்கிட்டே தாலியும் குண்டுமணியும்தான் நகையாம், பாவம்! தெரியுமோ, சேதி? சீரங்கநாதர் திருமுடி நூறு சவரனும்! என் பெண்ணுக்கு எட்டு வடத்திலே பெரிய சங்கிலி போடுறேன்னேன், சம்பந்திவீட்டார் பத்து வடத்திலே, கேட்கிரு..." போன்றஉரையாடல்களைக்காண முடியும்!!

தங்கத்தை ஆபரணங்களாக்கிப் பெண்கள் சுமந்து கொள்வதென்பது, இந்திய மண்ணிலேதான் அதிகம். இன்று நேற்று என்றல்ல, எப்படியோ இப்படியொரு பழக்கம் நீண்டகாலமாகவே யிருந்து வருகிறது! திராவிடர்களுடைய பழைய நாகரீகமே இந்த உலோக நகைகள் செய்யப்பட்டனவாகக் கூறுகிறது! வேதமந்திரத்தில்கூட 'சொர்ணபுஷ்பம் சமர்ப்பியாமி' இல்லையா, இங்கே!!

பெண்கள் நகை போட்ட மரங்களாகயிருக்கக்கூடாது என்கிற கருத்தைப் பலர் பலமாதிரி சொல்லி வந்திருக்கிருர்கள். கிடையாது.

ஆனுல் காங்கிரஸ்அன்றும் சரி, இன்றும் சரி, இதுபோன்ற சமுதாயத் திருத்தப் பிரச்னைகள்பற்றி தன் கருத்துக்களைச் சொல்லியது ஆனுல், சுயமரியாதை இயக்கம் நீண்டகாலமாகவே நகைபோடும் வழக்கம் கூடாது என்று கூறி வருகிறது! எனவே, மொரார்ஜி தேசாய்க்கு நகைகள்மேல் வந்துள்ள கோபம் கண்டு நமக்குப் பரபரப்போ புதுமையோ உண்டாகவில்லை!! இந்த நடவடிக்கையால், பெண்கள் நகையணியும் பழக்கத்தையே விட்டாற்கூட, நாம் அதிர்ச்சியடையோம்;மாருக மகிழ்வோம்.

"ஆடம்பரத்துக்கு மட்டுந்தானு தங்க நகைகளைச் செய்கிரேம் என்கிருய். அது தவறு அபாயம் சமபத்துக்கு அது எவ்வளவு உதவி புரிகிறது தெரியுமா? திடீரென்று கடன் வேண்டும்.கையில் நகைகளிலிருந்தால் கொண்டு போய் வைத்துவிட்டு, அந்த நெருக்கடியைத் தாண்டிவிடலாம். பணம் வந்ததும், மீட்டு விடலாம். இப்படி அது ஒரு சொத்தாக, பாங்க் செக் போலஇருக்கிறது!" என்று இன்னொரு பக்கம் சொல்லப்படுவதும் நமக்குத் தெரியும். இப்படிச் சொல்வோர், நாட்டின் பெரும்பான்மையினரான மத்திய தர வர்க்கத்தார்தான் ஆசைக்கும் அச்சத்துக்குமிடையிலே ஊசலாடிக் கொண்டிருக்கும் இவர்கட்கு நகைகள் சமய சஞ்சீவிகளாக யிருப்பது உண்மைதான்! இதை நாம் மறுக்கவில்லை!!

சமயத்துக்குப் பணம் தேவையென்று சங்கடப்படுகிற மத்திய தர வர்க்கத்துக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். எளிதில் தனக்குத் தேவையான கடனை எளிய வட்டியில் வாங்கவும், அதனைத் தவணைகள் மூலம் செலுத்தவும் வசதிகள் பெருககப்பட வேண்டும். அதனை அரசு செய்திருக்கிறது என்பது பூரணமாக நாம் சொல்ல முடியாது! அப்படிப்பட்ட வசதிகளைச் செய்யாமல் இதுபோன்ற முற்போக்கான நடவடிக்கைகளையெடுக்கும்போது ஏழை எளியவர்களுக்குச் சங்கடமும் தொல்லையும் உண்டாகத்தான் செய்யும்!!

இந்தக் கட்டுப்பாட்டால் பலருக்கு வேலை போகும் என்கிருர்கள் பொற்கலைஞர்கள். அதற்கு மார்க்கம் என்ன! அவர்களுடைய தொகை சொல்பம் எனலாம். அப்படி கொஞ்சமாகயிருக்கின்றவர்களுக்குச் சர்க்கார் வேண்டிய பண உதவி செய்து வேறு தொழில்களுக்குத் திருப்பி விடலாமே!! தொகை கொஞ்சம் எனும்போது அதிகப் பணமும் தேவைப்படாதே.

காங்கிரஸ் ஆட்சியாளர்கள் செய்கிற பெரிய தவறே, அணை போட்டுக் கொள்ளாமல் காரியங்கள் செய்வதுதான்.

இதனுல், சில முற்போக்கான நடவடிக்கைகளைச் செய்ய முற்பட்டு, தங்களது அவசரத்தால் அந்தக் காரியங்களுக்கே கெட்ட பெயரைக் கொண்டு வந்து விடுகிருர்கள்.

தங்கம் ஒரு உலோகம்! அதற்கு அளவற்ற பெருமையையும் மதிப்பையும் உண்டு பண்ணியவன் மனிதன்!!

உலகில் உண்மையில் மதிக்கப்பட வேண்டியது மனிதனை உயிர் வாழவைக்கும் உணவுப் பொருள்களும், அவைகளைத் திரட்டித் தரும் உழைப்புச் சக்தியும்தான்.

உழைப்போம்!—என்று ஒப்புகின்ற ஒரு சமுதாயம் மலரவேண்டும் என்பதே நமுடைய ஆசையாகும்.

அத்தகைய சமுதாயம் உருவாகும்போது, தங்கம் யாரையும் பல்லிளிகக வைக்காது ஒன்றுக்கு மதிப்பை உண்டுபண்ணுவதும், கீழேயிறக்குவதும் நம்முடைய கையில்தானிருக்கிறது என்கிற உண்மை, இப்போதைய தங்கக் கட்டுப்பாடுகளால் மக்களுக்குத் தெரிய வந்திருக்கிறது.

இந்த நடவடிக்கையால், ஏற்படும் சிற்சில வேதனைகளைப் போக்கும்வழிவகைகளையும் அரசு ஆய்ந்து செய்திருக்குமானுல், ஆங்காங்குமுள்ள சிற்சில அதிருப்திகளும் எழக் காரணமில்லாமல் போயிருக்கும்.

ஃ ஃ ஃ

"சிறை நினைவு"

சகோதரர் கருணுநிதி அவர்களின் தாயார் 'மேஜர்' ஆபரேஷனுக்கு ஆளாகி படுக்கையில் கிடப்பதை நாடு அறியும்.

எனவே, அவர் வழங்கும் 'சிறை நினைவு' கட்டுரை இந்த கிழமை வர இயலவில்லை. பொறுத்தருள்க.

—ஆ-ர்

கருமிகள் கதை!

இன்று உலகெங்கும் வியாபித்து நிற்கும் சக்தி எது தெரியுமா?... பணம்! 'பணமில்லாதவன் பிணம் !!' இன்று பணத்தைக் கொண்டே மக்களைக் கணிக்கிறார்கள். இலட்சம் இருந்தால்—இலட்சாதிபதி. கோடி பெற்றுவிட்டாலோ ஈஸ்வரன்—கோடீஸ்வரன்.

இவ்வித 'மகத்'த்தான பணத்திற்கு அடிமையானவர்களைக் 'கருமி' என்போம். அந்தக் கருமிகளின் சில விசித்திரமான விபரங்கள்,

* * *

ஜான் செல்வன் மக்மிலன் சமீபத்தில் ஜோகானஸ் பர்க்கில் இறங்கும்போது அவரிடம் பெறுமதி எவ்வளவு தெரியுமா? 6ஷிலிங் 4 பென்சும், 5 ஷிலிங் பெறுமானமுள்ள கந்தலாடையும்தான்! அவர் இறக்கும்பொழுது எவ்வித உறுதியும் விட்டுச் செல்லவில்லை. ஆனால் பின்னால் அவர் 156,300 பவுன்களுக்கு உரிமையாளன் என்று அறிந்தவுடன் உலகமே பிரமித்தது!

உலக சரித்திரத்தை உற்று நோக்கினால் இது எவ்வித அதிசயமில்லை. இவனிலும் எத்தனையோ 'மகா'பணப் பித்தர்கள் இருந்திருக்கிறார்கள்.

* *

1939-ம் ஆண்டு பக்கிங்காம் ஷையரிலுள்ள ஹெயர்பீல்டில் ஒருவர் இறக்கும் பொழுது தனது மூன்று மருமக்களுக்கும் 30,000 பவுன்கள் சொத்தை விட்டுச் சென்றார். இவை அவர் 75-வருடங்கள் 'கஞ்ச'த்தனமாக சேமித்து வைத்தவை. எப்படிச் சேகரித்தார் தெரியுமா?

கந்தலாடையே அணிவார். காலையில் இரண்டு மணிக்கு எழுந்து வேலைக்குச் சென்றுவிடுவார். ஏன் தெரியுமா? புகை வண்டியில் சென்றால் பணம்விரயமாகிவிடும்! எனவே கால்நடையாகவே பல மைல்களைக் கடப்பார். மெழுகுவர்த்தியைத் தவிர வேறெவ்வித விளக்கையும் பாவிக்கமாட்டார் இந்தக் கனவான்.

முதலாவது மகாயுத்தத்தின் பொழுது தனது இல்லத்தில் 1,500 பவுன்களை, எங்காவது யுத்தத்திற்குப் பயந்து ஓட வேண்டு வெண்டுமென்றால் கொண்டு செல்வதற்குத் தயாராக வைத்திருந்தார்.

ஒருமுறை தனது மருகனிடம் 100-பவுன் எடுத்துவரச் சொன்னார். அதுவந்தவுடன் உடனேயே சென்று பாங்கில் திருப்பிக் கொடுத்து வரச்சொன்னார், ஏனெனில் அவர் பணம் எடுத்து வரச் சொன்னது பாங்கில் அப்பணம் பத்திரமாக இருக்கிறதாவெனப் பரிசோதிப்பதற்காகத்தான்.

அவர் வாழ்வில் கண்ட ஒரேஒரு சுகம் என்ன தெரியுமா? அதிசயம் படாதீர்கள்! — பிரேதப் பெட்டி. அவர் சாவதற்கு 16வருடங்களுக்கு முன்பு தனக்களவான சலவைக் கல்லில் பிரேதப் பெட்டி செய்து வைத்திருந்தார். ஏனெனில் தனக்கு வெகு விமரிசையாக 'கடைகிச் சடங்கு' நடைபெற வேண்டுமென்ற ஆசையால்தான்!

* * *

1933-ம் வருடம் நியூயார்க்கில் ஒரு பெண் — பிச்சைக்காரியாகவே காலங்கடத்தியவள்—தான் சாகும் பொழுது 45.000 டாலர்கள் விட்டுச் சென்றாள். 4000 டாலர்கள் பாங்கிலும் மிகுதி 41,000 டாலர்கள் குடிசைக்குப் பின்புறம் ஓர் கிடங்கில் புதைத்தும் வைத்திருந்தாள்.

* * *

இத்தாலியில் ரிலோல் நகரிலுள்ள பிரிசுஸன்என்னு கிராமத்தில் 1931-ம் ஆண்டில் 81-வயது முதியவர் ஒருவர் இயற்கை எய்தினார். டாக்டர் அவர் உடலைப் பரிசோதித்த பின் அவர் இறந்ததற்குக் காரணம் உணவின்மை, பசிக் கொடுமை என்றார். எந்நேரமும் கந்தலாடையே அணிந்திருப்பார் பன்னும் உருளைக் கிழங்கையும் தவிர வேறெதையும் உட்கொள்ள மாட்டார். அந்தக் கிராமத்தில் அவரைப்பற்றி; அவர் ஒரு ஜெர்மானியர் என்பதும் பாஸ் என்னும் நாமம் பூண்டவர் என்பதையும் தவிர வேறெதுவும் தெரியாது.

மரணத்தன்று பிணம் புதைப்பவன் அவருடைய 'சொதா'கிய கந்தல் ஆடைகளை கிளறும் பொழுது 20,000 லையர்கள் பவுனுக ஜொலிப்பதைக் கண்டான், மேலும் அதியத்தால் கிளறும் பொழுது எத்தனையோ பிரபல கம்பெனிகளின் இவரின் பங்கு சர்டிபிகட்களும், பாங்குகளில் சேமித்துவைத்த பணத்தைக் குறிப்பிடும் பாஸ் புத்தகங்களும் இருப்பதைக் கண்டான். அவர் சேமித்து வைத்தது எவ்வளவு தெரியுமா? பட்டினியால் இறந்தவரின் பெறுமானம் — கொஞ்ச நஞ்சமல்ல, 70,000 பவுன்கள்!

1956-ம் ஆண்டில் செஷயரிலுள்ள ஈனகோன் நகரில் வசித்து எனேச்செருட்டைப் பார்த்து மக்கள் எல்லோரும் நகைத்தார்கள். பைத்தியமாகக் கருதினார்கள். பெட்ரோல் ஊத்தி எரித்தாலும் கருகாத, அழுக்குப் படிந்த உடையே அணிந்திருப்பான். ஆனால் அவன் இறந்த பொழுது 30,000 பவுன்களும் அதிபதி என்பதை அறிந்து மூக்கின்மேல் விரலை வைத்து வியந்தார்கள்.

* * *

1950-ம் வருடம் மார்ச் திங்கள் பிளைமௌத் நகரில் ஓர் ஏழை இறந்தபொழுது அவனுடைய பாக்கெட்டில் 9,000 பவுன்கள் கத்தை நோட்டுக்களாக இருந்ததைக் கண்டார்கள்!

உலக மாகாயுத்தத்திற்குமுன்பு லண்டன் மாநகரில் கவுன்ட் கவுன்சில் என்னும் இயக்கம் ஓர் அறிக்கையை வெளியிடுமாறு வேண்டப்பட்டது.

* * *

புல்காம் நகரில் பெல் என்னும் பெண் ஒருத்தி பிச்சை எடுத்து ஜீவனம் நடத்தி வந்தாள். ஒரு நாள் யாரும் கவனிப்பாரற்று ரோட்டில் முனகிக் கொண்டிருப்பதைக் கண்டு இந்தக் கமிட்டி ஆதரவு நல்கியது. பின்பு, இவளின் பெயரில் பாங்கில் 1,000 பவுன்கள் சேகரித்து வைத்திருந்தாள் என்பது தெரிய வந்தது!

கரோலின் செய்மர் வெல்வத் நகரில் தனது கணவன் இறந்த பின்பு யாருமற்ற அனாதையாய் மார்க்கெட்டில் கழித்து வீசப்பட்ட அழுகிய மரக்கறிகளை உண்பதைக் கண்ட 'கவுன்ரி' இயக்கத்தார் இவளுக்கு ஆதரவு கொடுக்க முன் வந்தனர். இவள் இயற்கை எய்திய பிறகே, அவள் 80,000 பவுன்களுக்கு உடமையாளர் என்பது கமிட்டிக்குப் புலனாகியது.

—0—

சாவே சீச்சீ!

ஃ

பொதிகைமலைத் தென்றலவர் பேச்சு! நல்ல
பொங்குதமிழ் தென்மதுரை மன்றம் போச்சு!
தகுதியுடை பெரியவரை எடுத்து விட்டாய் மூச்சு;
தரமில்லா சாவேநீ! போபோ சீச்சீ!

ஒடியாத வீணையினை ஒடித்துவிட்டாய்;
உத்தமரின் ஆலயத்தை இடித்து விட்டாய்;
வடியாத கண்ணீரை வடிய வைத்தாய்;
வாழ்வெல்லாம் நல்லவரை நோக வைத்தாய்;

நேற்றுவரை காற்றெனவே
பறந்தார்—அந்த
நெறியாளர் சாவதற்கா
பறந்தார்?

வாள்பிடித்த வேந்தனுக்குச்
சாவு உண்டு
பால்குடிக்கும் பாலனுக்குச்
சாவு உண்டு

சீழ்பிடித்த நோயனுக்குச்
சாவு உண்டு;—தமிழ்
வேல்பிடித்த ஜீவாவுக்கும்
சாவுதான் உண்டா?......

சி. கணேசன்

காங்கிரஸ் . . .

?ம் பக்கத் தொடர்ச்சி

யைப் பற்றி, அகில உலகப் பிரச்சினையை விவாதிக்கவேண்டிய நேரத்தில் அனைத்திந்தியப் பார்லிமெண்டு கூடி ஆலோசிக்கிறது-

* * *

திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்ட நாளிலிருந்து, எப்படியும இதனை ஒழிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிப் பாடுபட்டவர் காமராசர். தமிழ் நாடு காங்கிரசையே ஏவிவிட்டார்.

நம்மால் மறக்க முடியவில்லை! மேடைகளிலே ஏறி அண்ணவை பற்றித் தாக்கிய முறைகள், அப்பப்ப, சொல்ல நாக்கூசும். கருப்பையா, வின்சென்ட், இப்படி யாராரோ; அழைத்துவரப்பட்டு முடுக்கிவிடப்பட்டார்கள். தூற்றினல் அதுகண்டு துவண்டு விடும் என்று!!

'தேனி' போன்ற இடங்களில் அடியாட்களைக் கொண்டு அரும்பும் இந்தப் புதுக்கட்சியைப் பூண்டோடு அழித்துவிடலாம் என்று மனப்பால குடித்து, அந்த நடவடிக்கைகளிலும் காங்கிரஸ் ஈடுபட்டது!!

கழகத்தைத் தாக்குவதற்கென்றே காமராசருடைய முயற்சிகளால் புதிய புதிய ஏடுகள் கிளம்பின! நாராசத்தைக் கொட்டின!!

இவையெல்லாம் போதாதென்று கழகத்துக்குள்ளேயே உட்பூசல்கள அரும்பிய சமயத்தில், தோழர் சம்பத்தைத் தட்டிக் கொடுத்து, அதன் மூலம் சரியச் செய்யலாம் என்று சதி செய்யப்பட்டது.

கழகத்தின் பெரிய 'தலை' களையெல்லாம் தேர்தலில் தோற்கடித்துவிட்டால் சகலமும் தீர்ந்துவிடும் என்று கடந்த தேர்தலில் பணத்தைத் தண்ணீராக்கிச் செலவழித்துப் பார்த்தார்கள்.

மறந்துவிடக் கூடாது நாம்!— மாபெரும் கட்சி, காங்கிரஸ்! மாடமாளிகைகளைச் சொத்தாகக் கொண்டது, மனோகரமான ஆசைகளை மனதிலெழுப்பக் கூடிய அதிகாரத்தைப் பெற்றது. சீமான்களின் செல்வாக்குப் பெற்றது! அந்தக் கட்சி இப்படிப் பற்பல முயற்சிகளை இதுவரையிலே செய்தது, கழகத்தை அழிக்க.

"தி. மு. கவா? அதை நான் பார்த்துகொள்கிறேன். நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம்'' என்று கடந்த தேர்தலுக்கு முன் டில்லி மூலவர்களிடம் காமராசர், கம்பீரமாகப் பேசிவிட்டு வந்தார்.

கம்பீரம் காற்றில் பறந்தது! பெரிய கட்சியால் பேசி எதிர்க்க முடியவில்லை!!

அடக்குமுறைகளும் அடியாட்களும் அசூயைப் பேச்சுக்களும் பயனளிககவில்லை!!

பணடலம், பத்திரிகை பலம்,

12-ம் பக்கம் பார்க்க)

தெறித்த முத்து

மூடநம்பிக்கை அறியாமை இவற்றின் விளைவாக ஏற்படுகின்ற சுடுகாட்டு அமைதியைவிட, சுயசிந்தனை பகுத்தறிவு இவற்றின் விளைவாக ஏற்படுகிற கடும்புயலையும் கோடை இடியையும்தான் விருப்புகிறேன்.

இங்கர்சால்

* * * * * *

முதியவர்கள் அடைகிற வெற்றியைவிட இளைஞர்கள் அடைகிற தோல்வியே சிறந்தது. ஏனெனில் வெற்றியோ தோல்வியோ இளைஞர்களின் ஆர்வத்தாலும் ஆவேசத்தாலும் தான் ஒரு நாடு முன்னேற முடியும். முதியவர்களின் ஆமை வேகச் செயல்களால் அல்ல!

—டிஸ்ரலி

தெறித்த முத்து

நாம் யாரையும் அடக்கியாள மாட்டோம் அதே நேரத்தில் வேறுயாருக்கும் நம்மை அடக்கி ஆளவும் அனுமதிக்க மாட்டோம்

—சன்யாட்சன்



வெற்றிக்காக உழையுங்கள்

வெற்றிக்கு உங்கள் பணி மிகவும் இன்றியமையாதது. யாவரும் கடினமாக உழைக்க வேண்டியது மிகவும் அவசியம். நம் படை சக்தியை பலப்படுத்துவதற்கு அதிக அளவில் உற்பத்தி செய்ய தளராது உழைக்கவேண்டும். நாட்டின் வளங்களை ஒன்று திரட்டி, எல்லா முனைகளிலும் வெற்றிகாண கடினஉழைபபு தேவை.

தொழிற்சாலை, பட்டறை, யந்திரசாலை, மாபெரும் தொழிலகம் ஆகியவைகளில் உற்பத்தியை அதிகரிக்க யாவரும் கடினமாக பாடுபடவேண்டும். முன்னணிக்கும் நாட்டின் உள் தேவைகளுக்கும் முக்கியமான பொருள்கள் தங்குதடையின்றி செல்ல யாவரும் உழைப்போம்.

ஒவ்வொருவரும் ஒருபடைவீரன்

அதிக
உற்பத்தி செய்வதிலும் பலமான
பாதுகாப்பு அளிப்பதிலும்

OA 62/F4

போலி மயில்!

கோயிலூர் அன்று கோலாகலத்தில் மிதந்தது. தெருவெங்கும் மாவிலைத் தோரணங்கள்——குலை தள்ளிய வாழை மரங்கள்—தென்னம் பாளைக் குருத்துக்கள் முதலியன காற்றில் அசைந்தாடி திருவிழா காண அழைப்பு விடுத்தன.

"பாவம் தீர்க்கவரும் பகவானே—வருக!"

"பக்தர்கள் வினைபோக்க வரும் பரமனே—வருக!"

'புண்ணிய சீலரே வருக!"

"புவனத்தின் ஜோதியே—வருக!"

என்றெல்லாம் எழுதப்பட்ட வரவேற்பு வளைவுகள், மக்களுக்கு மகேசனின் வருகையை அறிவுறுத்துவது போல் அலங்காரமாகத் தெரிந்தன.

சுந்தரேசுவரர் கோயில் பிரகாரத்தில் கூடியிருந்த கூட்டம் சொல்ல முடியாது. ஆண்,பெண் குழந்தைகள், கிழவர்கள் என்று ஈ பறக்க இடமின்றி நீக்கமற நிறைந்து நின்றார்கள்.

சங்கொலி எழுந்தது.

கோயில் வெடி விண்ணதிர வெடித்தது.

நாதஸ்வரமும் கொட்டு மேளமும் கம்பீரமாக முழங்கியது.

மக்கள் கூட்டம் மெய் மறந்து இரு கரங்களையும் சிரமேல் கூப்பி பிரகாரத்தின் தலைவாசலை நோக்கி ஆகாகா...! என்று பக்திப் பரவசத்தோடு முணுமுணுத்தது.

கீழே விரித்திருந்த செந்நிற ரத்தினக் கம்பளத்தை மயில்தோகை பெருக்கிச் சுத்தப்படுத்த——வரி

ப. செல்வராசன்

சையாக வைத்திருந்த வெங்கலச் சிமிழ்களிலிருந்து சந்தனப்பொடியும் சாம்பிராணியும் நெருப்போடு ஐக்கியமாகி நறுமணம் பரப்ப—காம்பு நீக்கிய மல்லிகை மலர்களை கம்பளத்தின் மீது தூவி பாதை காட்ட—தமது தவத்தால் பக்தர்களின் பாபத்தைப் போக்கி முக்தி கொடுக்கும் முனிசிரேஷ்டர்—தவஞானி—அறச் செல்வர்—அடியாரின் அருளாளர்—சிற்றம்பல அடிகளார் ஆங்கே திருவிஜயம் செய்து, எலிரோமத்தால் செய்யப்பட்ட பட்டுப் பஞ்சணை மீது அமர்ந்தருளினர்.

திருமந்திரம் ஜபிக்கப்பட்டது.

திருநீறுப் பிரசாதம் வழங்கப்பட்டது.

பக்தகோடிகள் தத்தம் பாவங்கள் நீங்கிய பரவசத்தோடு வீடு திரும்பினர்,

அந்தக் கூட்டத்திலே ஒருவள், பெயர் பத்மா-அனாதை, அதோடு விதவை—இளங் குமரி.

அருள் வேண்டி தன்னலக்காரர்களின் முள் வேலிக்குள் தன்னந்தனியே சிக்கித்தவிக்கும் தன் மனதற்கு அமைதி வேண்டி தவஞானியின் உபதேசம் வேண்டி சிற்றம்பலம் அடிகளாரின் எதிரே வந்து நின்றாள்.

"குழந்தாய்! உன் ஏக்கம் புரிந்தது. என் நோக்கம் விரிந்தது. இந்தா! இந்தக் கனியைப் பெற்றுச் சென்று, கதிரவன் மறையும் சமயம் அந்திவான ஒளியில் காட்டிய பிறகு புசித்துவிடு. அதற்குப் பிறகு என்னை வந்து பார். உன் கவலை தீர உபதேசிக்கிறேன். கஷ்டங்களை விலக்கிவிடுகிறேன். சென்று.........வா!"

கனி பெற்றுப் புறப்பட்டாள் பத்மா—குறைதீர்ந்த நெஞ்சோடு

*

.........நாடகாசிரியர் எழிலன் கோயிலூரில் ஊரறிந்த ஒரு சீர்திருத்தச் செம்மல். நல்ல காரியங்கள் அத்தனைக்கும் தாமே வலிய சென்று முன்நின்று நடத்துபவர்.

இரவெல்லாம் புதிய நாடகம் எழுதுவதில் ஈடுபட்டிருந்த அவர், விடியத் தொடங்கும்சமயம் குளிப்பதற்காக எழுந்தார். டவலையும் சோப்புக்கட்டியையும் எடுத்துக் கொண்டு குளிக்குமறையை நோக்கிநடந்த அவர் எதிரில்...... தலைவிரி கோலந்தோடும் கண்ணீர் ததும்பும் கண்களோடும்—வந்து நின்றாள் பத்மா!

"அண்ணா! எங்கோ விழவேண்டிய பேரிடி என்மீது விழுந்துவிட்டது. ஏற்கனவே மொட்டை மரமாக நின்ற நான் இப்போது பட்ட மரமாக—பழுதடைந்த சித்திரமாக—பண்பு தவறிய பதிதையாகிவிட்டேன்..."

அவள் சொல்லிய சேதி எழிலனை எரியும் நெருப்பில் தவறி விழுந்துவிட்ட குழந்தையைப் போல் துடிக்கச் செய்தது. கண்களை மூடிக்கொண்டு ஆழ்ந்து யோசித்தார்.

சிலையை உருவாக்குவதும் உளிதான். ஒரு அடி அதிகமானால் அதே சிலையை உடைத்து மூளியாக்குவதும் அந்த உளிதானே!

பத்மாவை பாழாக்க பாதை வகுத்துக் கொண்ட சிற்றம்பலமும் மனிதன்தான். பாழாக்கிய மனிதனையும் வழியையும் கண்டறிய வழி தேடிய எழிலும் மனிதன்தான். ஆயின் இருவருக்குமிடையேதான் எவ்வளவு வேறுபாடு?

எழிலன் நாடக மன்றத்தின் நடிகை சாந்தாவைத் தேடி ஓடினார். மக்கள் மத்தியில் ஆஷாடபூதி வேஷம்போட்டு தூயவனாக—பக்தர்களின் துயரைத் துடைப்பவனாக நடிப்பவனின் அந்தரங்க நாடகத்தை வெளிப்படுத்த ஒரு நடிகையால்தானே முடியும்!

* * *

......சிற்றம்பல அடிகளாரின் சிந்தை தேன் பட்ட பலாச்சுளை போல் இனித்தது—சிரித்த முகத்தோடு எதிரே நின்ற சாந்தாவை கண்டு! இரவு நேரம், இங்கிதமாகப் பேசும் இளங்குமரியோ எதிரில். இதயத்திலோ ஆயிரமாயிரம் 'பேரின்ப' எண்ணங்கள்! தடுப்பாருமில்லை-கெடுப்பாருமில்லை, அடிகளார் ஆனந்தத்துக்கு ஏது அட்டி?

கற்கண்டும் குங்குமப் பூவும் போட்டுக் காய்ச்சியப் பசும்பாலை வெள்ளிக்கிண்ணத்திலே வார்த்து தம் உள்ளம் திருடிய கிள்ளை மொழியாளுக்குத் தந்து உபசரித்தார்.

சாந்தா பாலைச் சாப்பிட்டுவிட்டுச் சிரித்தாள். அந்தச் சிரிப்பு அவரைச் சித்திரவதை செய்தது. உஷ்ண மூச்சோடும் உல்லாச வெறியோடும் சாந்தாவை நெருங்கினார். அப்போதும் சாந்தா சிரித்தாள். ஆனால் இப்போது சிரிப்பொலி அவளுக்கே கேட்கவில்லை!

தவசிரேஷ்டர் சாந்தாவுக்கு வெறும்பாலை மட்டுமா தந்தார்? பரிமளப்பாவை சிறிது நேரம் குரலையிழந்து மயங்கிக் கிடக்க மருந்தையுமல்லவா பாலோடு கலந்து தந்துவிட்டார்!

கொஞ்சம் கொஞ்சமாக நினைவிழந்துகொண்டிருந்த சாந்தா காஷாயத்தின் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ள அந்த நேரத்திலும் போராடினாள். ஒதுங்கினாள். குரல் கொடுக்க முயற்சித்தாள். குமுறினாள்.

சிற்றம்பலத்தின் சினம் எல்லை மீறியது. வெறியோடு சாந்தாவின் தோளைப்பிடித்து இழுத்தார். அந்த வேகத்தில் சாந்தாவின் ரவிக்கை கிழிந்தது. அதேசமயம் அவளது சுய உணர்வு முழுவதும் மங்கி மறைந்தது, சிலை வீழ்ந்தது போல் சாய்ந்தாள் கீழே!

கிழிந்து தொங்கிய ரவிக்கையினிடையே வாழைத் தண்டைப் போன்ற சாந்தாவின் வாலிபத் தோள்!......அங்கே?

அரிவாளால் வெட்டியதுபோல் நீண்ட தீப்புண்ணும் காணப்பட்டது. சிற்றம்பலத்தின் தீ நெஞ்சம் அத் தீப்புண்ணைக் கண்டதும் திடுக்கிட்டது. வெகுவேகமாக பின்னோக்கிச் சென்றது...

* * *

"குடிகாரனாக குடும்பத்தைப் பற்றிய கவலையில்லாதவனாகச் சுற்றிக்கொண்டிருந்த எனக்கு சோறு போட்டு புத்திமதி சொல்லிவந்த என் தங்கை சொர்ணமா இது? ஒரு நாளிரவு குடித்துவிட்டு வந்து, சூதாடுவதற்குப் பணம் கேட்டபோது 'இல்லையே அண்ணா' என்று சொல்லியதற்காக கொள்ளிக் கட்டையை எடுத்து நான் போட்ட சூடுதானே இந்தத் தழும்பு! அப்படியானால் என் தங்கையிடமா நான்...அய்யோ!"

சிற்றம்பலம் தன்கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றி ஒருகணம் அதில் மின்னிய பச்சைக்கல்லை உற்றுப்பார்த்தான்...

நடு இரவைத் தாண்டியும் உள்ளிருந்து சாந்தா மூலம் எந்தவித சமிக்ஞையும் வராததினால்,போலீசோடு பதுங்கியிருந்த எழிலன் சிற்றம்பலத்தின் அறையை நெருங்கிப்பார்த்தான். உள்ளே சாந்தா ஒரு பக்கமும் சாமியார் ஒரு பக்கமும் வீழ்ந்துகிடந்தார்கள். டாக்டர் வந்து சாந்தாவுக்கு மயக்கம் தீர ஊசிபோட்டார். அவளும் எழுந்து நின்றாள். ஆனால் சிற்றம்பலப் மட்டும் எழுந்திருக்கவேயில்லை. அவன் கையில் கையில் இறுக்கமாகப் பிடித்திருந்த மோதிரத்தில் ஒரு வைரக் கல்லை மட்டும் காணோம்!

சொர்ணத்தை கொடுமைக்காளாக்கிவிட்டு சொல்லாமல் கொள்ளாமல் வடக்கே ஓடிவிட்ட குடிகார சின்னப்பன், இப்போது சிற்றம்பல அடிகளாக திரும்பிவந்து, சாந்தா என்ற மாறு பெயரில் நடிகையாகிவிட்ட தன் தங்கையிடமே தகாத செயலை மேற்கொண்டுவிட்டதைப் புரிந்துகொண்டு தற்கொலை செய்துகொண்ட ரகசியம்——அவனது தங்கைக்கே தெரியாதபோது மற்றவர்களுக்கு மட்டும் எப்படிப் புரியும்?

வஞ்சகன் ஒழிந்தான் என்ற நிம்மதி மட்டும் இருந்தது எல்லோர்க்கும்.

—:o:—

தமிழோவியம்

கணவனுக்குப் பின்னால் . . .

கா. வேழவேந்தன் B.A

நீதி பிறழ்ந்தது!

நெறி குலைந்தது!

செங்கோல் வளைந்தது!

தீராத பழி சேர்ந்துவிட்டது!

மன்னன் நெடுஞ்செழியன், புயலால் தென்னை சாய்வதுபோல் மண்ணில் சாய்ந்தான்!

'கோவலன் கள்வனல்லன், காவலனே கள்வனானேன்.

ஆழ்ந்து செயலாற்றாத எனக்கேன் சிங்காதனம்?

அணுவேனும் குற்றமற்றவனின் தலையைத் துணிக்கச் செய்த இந்த மாபாவிக்கேன் ஒரு செங்கோல்?

ஆதிமுதல் வழி வழியாகச் செழித்த தமிழரின் அறநீதியை ஆழக் குழி வெட்டிப் புதைத்த என் உடலிலா இன்னமும் உயிர் தங்கிக்கிடக்கிறது?

நீதிக்கு நீதி வழங்க வேண்டாமா?

தலைக்குத் தலை உருள வேண்டாமா?

உயிருக்கு உயிரைத் தரவேண்டாமா?

இப்படிக் கதறிக்கொண்டே விண்வரை தன் புகழ்க்கொடியை நாட்டி மண்ணிலே வீழ்ந்தான் பாண்டியன் நெடுஞ்செழியன்.

அரசவை அதிர்ச்சியால் குமுறிக் கொந்தளித்தது!

அகிலத்தின் எந்தக் கோடியில் இத்தகையக் காட்சி நிகழ்ந்திருக்கிறது?

குடிமகன் ஒருவன் உயிருக்கு முடிமகன் தன் உயிரையே பணயமாக எடுத்து வைத்து நீதியை மீட்ட வரலாறு எங்கே நடந்திருக்கின்றது?

இப்படி வெடிக்கும் நெஞ்சத்துடன் வியப்பின் முகட்டில் சென்று நின்றார்கள் கூடியிருந்தோர்.

ஆனால் அடுத்த நொடியே அந்த நிகழ்ச்சியும் நடைபெற வேண்டுமா?

மன்னன் மாய்ந்தான், அன்னையாம் பாண்டிய குலக் கோப்பெருந்தேவி அடுத்து அலறி எழுந்தாள்.

நடுங்காத அவள் உடல் நடுங்கிற்று.

குலையாத அவள் மேனி குலைந்தது.

என் இறை மறைந்துவிட்டாரா?

என் உள்ளக் கோயிலின் எழில் விளக்கு ஓய்ந்து அணைந்துவிட்டதா?

அப்படியானால் என் உயிர் இந்த உடலில் ஏன் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும்?

கணவன் உருவென்றால் சுட்டிய மனைவி அவன் நிழல் அல்லவா?

துணைவன் பொய்கை என்றால் தொத்தும் கிளியான அவன் மனைவி, அதில் மலர்ந்து மணக்கின்ற தாமரையல்லவா?

உருவில்லாவிட்டால் நிழல் ஏது?

ஒய்யாரப் பொய்கை இல்லாவிட்டால் தாமரை ஏது?

உற்ற கணவர் போனபின் சுற்றம் ஏது?

தாய் மாயலாம், தாய் போய்விட்டால் உலகிலுள்ள ஒருமூதாட்டியை சுட்டிக் காட்டி, 'இவளைத் தாயாக ஏற்றுக்கொள்' என்று மாற்றார் வேறு ஒருத்தியைத் தாயாகக் காட்ட முடியும். நானும் காட்டுகின்ற அவளைத் தாயென்று அழைக்க முடியும்!

தந்தை மறையலாம், சொந்தமும் பந்தமும் நிறைந்த எந்தை போய்விட்டால், ஊரில் வயதான ஒரு பெரியவரைச் சுட்டிக்காட்டி 'இவரையும் தந்தையாகவே நினைத்துக் கொள்' என்று வையகம் கூறமுடியும், நானும் அவரை தந்தையாக ஏற்றுக்கொள்ள முடியும்.

மகன் மடியலாம். 'மகனே, மகனே!' என்று உற்ற மகன் மாண்டதை எண்ணி நான் உருகும்போது, உலகம் வேறொரு குழந்தையைக் கொண்டுவந்து, 'இதோ இவனும் மகன்தானே ஏற்றுக்கொள்!' என்று கூறலாம் நானும் அவனை மகனாக ஏற்றுக் கொள்ள முடியும்.

அண்ணன் அழியலாம், கண்ணான அண்ணன் மண்ணாகிப் போனானே என்று கதறும்போது இந்த மாவையம் மூத்தவன் ஒருவனைச் சுட்டிக்காட்டி, இவனை ஏன் அண்ணனாக ஏற்றுக்கொள்ளக் கூடாது?' என்று கேட்கலாம். நானும் அவனை அண்ணனாக ஏற்றுக்கொள்வதில் அட்டியில்லை.

ஆனால்......

உயிருக்குள் உயிரான உற்ற துணைவன் போய்விட்டால்; என்ன எஞ்சியிருக்கிறது?

ஊரிலிருக்கிற ஒருவனைச் சுட்டிக் காட்டி 'இவனும் உன் கணவனே' என்று எந்த இழிபண்பாளனும் கூறமுடியுமா? கணவனையிழந்த மனைவியர்க்கு, மண்மீது கணவனாக ஒப்பிட்டுக் காட்டுவதற்கு வேறு பொருள் உண்டா?

ஓர் ஆறு பாழாகிவிட்டால், உலகத்தில் ஓடுகின்ற வேறோர் ஆற்றைக் காட்ட முடியும்.

ஒரு விண்மீன் உதிர்ந்து விட்டால், மற்றொரு விண்மீனைக்காட்டி ஆறுதல் கூறமுடியும்.

ஒரு மலர் கருகி விட்டால் இதழ் அவிழும் மற்றொரு மலரைச் சுட்டிக் காட்ட முடியும்.

ஆனால்—

ஒளி உமிழும் கதிரவனே அழிந்துவிட்டால், மண்மகளுக்கு வேறொரு கதிரவனைக் கொண்டு வந்து காட்ட முடியுமா?

நீதிக்கு விலையாக நேரிய உயிரையே தந்தார் என் நெஞ்சத் தலைவர்.

பாதி அழிந்துபோன பின் மீதி மட்டும் வையத்தில் நிலைக்க முடியுமா?

போய்வருகிறேன் நான். பொற்றமிழ் மாதர் போற்றும் புகழ் கற்பின் வரலாறு வாழ்க!'

இப்படிக் கூறி வேரோடு பிடுங்கிய பூங்கொடி சாய்வதுபோல், வேந்தன் நெடுஞ்செழியன் அருகிலே சாய்ந்தாள் அந்தச் சீரும் சிறப்பும் பெற்ற பேரரசி!

இணைந்தே வாழ்ந்த அவர்கள் இணைந்தே மறைந்தார்கள்.

பிணைத்த கைகளுடன் வாழ்வைத் துவங்கிய அவர்கள் இணைத்த கைகளுடன் வாழ்வை முடித்துக் கொண்டார்கள்.

உலகம் இமைகளை உயர்த்தி நோக்குகிறது.

கட்டிய கணவன் 'மெனலஸ்' என்பானை எட்டியாக எண்ணி தொட்டுத் தூக்கிச் சென்ற 'பாரீ'சை விரும்பிய 'ஹெல'னைப் பற்றியும் இலியட் என்ற காவியம் புகழ் பாடுகிறது!

பட்டது உற்ற துணைவரின் உயிர் என்றதும் பட்டத்தரசியாம் கோப்பெருந்தேவி, சுட்ட சட்டியைக் கைவிடுவது போல், உலகை விட்டுச் சிட்டாகப் பறந்தாள் என்ற செய்தி உலக இலக்கிய அறிஞர்களின் மூக்கின்மேல் விரலை வைக்கத் தூண்டுகிறது.

யார் இந்த எழிலார்ந்த இலக்கியத்தின் சொந்தக்காரர்கள் என்று ஏக்கத்தோடு கேட்கிறார்கள்.

'இதோ இருக்கிறோம்' என்று இறுமாப்புடன் மார்தட்டுகிறோம் நாம்.

'கெடுக ஆயுள் என
மன்னவன் மறங்கிவீழ்ந்
தனனே தென்னவன்
கோப்பெருந்தேவி குலைந்தனள்
நடுங்கிக்
கணவனை இழந்தோர்க்குக்
காட்டுவதில் என்று
இணையடி தொழுது வீழ்ந்
தனளே மடமொழி'

—சிலப்பதிகாரம்

—0—

"தலைவிதி தனைப்பகைத்தூத் தகாத வேட்கையூறும் உள்ளம் தந்து, தரணியில் தாங்கொணு வறுமையில் விட்டுப்பின்னர் நற்கதி உனக்கில்லை—நரகந்தான் நரனே! என்றால். தலைவிதிதனை எழுதிய நாயகனே! தவறுகள் யாருடையது? பச்சைக் குழந்தையோ நீ! பாவி 'நீ விளைத்த தீவினைகள் தீர, உன் கன்னத்தில் அறைவேன்! செல்லடா நரகத்துக்கே!!'

—உமர்கய்யாம்

காலக் கிழவனின் கேள்விகள் . . .

சீடுகாட்டு அமைதியைச் சொந்தமாக்கிக் கொண்டிருந்த அந்த சாலையில் பதைபதைப் போடும், பரபரப்போடும் போய்க் கொண்டிருந்தான் அவன்.

நேரம் ஆக ஆக அவன் நடையில் வேகம் அதிகரித்தது. நடந்து வந்த பாதையைப் பற்றியோ, நடந்து கடக்க வேண்டிய வழியைப் பற்றியோ சிந்தித்துப்பார்க்கமுயன்ருன். முடியவில்லை, அது அவன் நிலே?

அதோ அதுதான் சேரவேண்டுமென்று நினைத்துவந்த இடம் புறப்பட்ட இடத்தில் நினைத்த இடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டோமென்ற 'நிம்மதி' இன்னும் சிறிது நேரத்தில் அவனுக்குக் கிடைத்துவிடும்.

சுற்றுமுற்றும் தன் பார்வையைப் படரவிட்டான். அந்தநோத்தில் அவனது வாய் அவனையும் மீறி—

"அப்பாடா! இப்போதுதான் எனக்கு நிம்மதி" என்றது.

அதே நேரத்தில்—

"ஆமாம்! இனி உனக்குமட்டுமல்ல எல்லோருக்குமே நிம்மதி தான்—அதுவும் நிரந்தரமான நிம்மதி" எள்றது ஒரு குரல்!

அவன் திடுக்கிட்டான்!

"யார் நீ?" என்று திகைப்புடன் கேட்டான்.

"என்னைத் தெரியவில்லையா? நான தானப்பா காலக்கிழவன்"

"எங்கே யிருக்கிருய்?"

"முதுகிலேயே இருக்கிறேனே—அதுகூடவா தெரியவிலலை"

"எனக்குத் தெரியவில்லையே!"

"உனக்குத்தான் எதுவும், எப்போதும் தெரிந்ததில்லையே! போகட்டும்!! நீ யேனப்பா நிம்மதியைத் தேடி இப்படி நீண்டவெளிப் பயணம் நடத்துகிருய்?"

இந்தக் கேள்வியை அவன் எதிர்பார்க்கவில்லை. ஆயினும்,பதிலைப் பட்டென சொல்லி வைத்தான்.

"எல்லாவற்றிற்கும் என் எதிரிகள்தான் காரணம்!"

"எந்த எதிரிகளையப்பா சொல்கிருய்? எல்லையைச் சுற்றிவளைத்துக்கொண்ட ஈனர்களைத்தானே!'

"இல்லை! அவர்கள் இந்த நாட்டையல்லவா ஆக்கிரமித்துக் கொள்ள முயன்ருர்கள்! ஆனல் 'தரணியை மீட்போம்! தாயகத்திற்கு விடுதலை கேட்போம்" என்று கூறிக்கொண்டு இங்கே யிருக்கிறவர்கள் என் பதவிக்கே உலை வைக்கிருர்களே! எல்லையிலே இருக்கிறவனைப் பற்றிக் கவலையில்லை! அருகிலே யிருக்கிற ஆபத்தானவனை அழித்துவி.த் திட்டம் போட்டுவிட்டேன். அதற்காகச் சட்டமும் கொண்டுவர ஆவன செய்துவிட்டேன். விரைவிலே அந்த 'விடுதலை கேட்கும் கும்பல்' ஒழிந்துவிடும்!" இப்பச் சொல்லிவிட்டுப் பெரியதொரு பெருமூச்சு ஒன்றை வெளியாக்கிஞன் அவன்!

காலக்கிழவன் வாய்விட்டுச் சிரித்தான்! "பைத்தியக்காரா! முட்டாள்தனமான எண்ணங்களின் மொத்த வியாபாரிபோலவே பேசுகிருய், நடந்து கொள்கிருய்! படையெடுத்த எதிரிக்கும், அவனுக்குப் பக்கம் நின்ற துரோகிக்கும் பயப்படாத நீ,—ஒரு காலத்தில் 'நானே கவனித்துக் கொள்வேன்—மிகச் சாமான்யர்கள்" என்று கூறினயே—அந்த விடுதலைக் கூட்டத்திற்கா பயப்படுகிருய்?"

"சாமான்யர்கர் என்று எண்ணித்தான் நானும் ஏமாந்துவிட்டேன்! அவர்கள் எப்படியோ பலம் பெற்ற சக்தியாகிவிட்டார்கள்—இனிச் சட்டத்தின் மூலம் அவர்கள் கொட்டத்தை அடக்க வேண்டும்"

"'படிக்காதவனே' என்று சொன்னலும் இடித்துக் காட்டுகிருனே' என்று பழி கூறுவாய், காலக்கிழவன் என்ன இப்படிக் கடுமையான வார்த்தைகளால் அர்ச்சிக்கிருனே என்று நினைத்து வருந்தாதே! நீயும் உன்னைச்சார்ந்தவர்களும் சரித்திரம் படித்ததில்லையா? படித்ததைக் கேட்டதில்லையா?

"அகம்பாவச் சுவற்றிலே மோதி மோதி எத்தனையோ ஆதிக்கபுரிக் கோமான்கள் அடிச்சுவடு தெரியாமல் அழிந்துபோன கதைகள் உனக்கும உன்னைச் சார்ந்தவர்களுக்கும் நினைவில்லையா? பாதை மறந்தவனே! பைத்தியக்காரனே!! தேசத்திற்கு தீங்கு என்றதும், நேசக்கரம் நீட்டி நேர்மை உள்ளத்தோடு—நெஞ்சத் தூய்மையோடு ஒத்துழைக்கும் அந்த 'நெறி மிகுந்த' விடுதலைப் படையை நெருக்கடியைப் பயன் படுததியா அழித்துவிடப்பார்க்கிறீர்கள்?

'தாவி வரும் குழந்தையின் கன்னத்தைக் கடித்துவிடும் பாவி' களாகவா மாறப்போகிறீர்கள்?

"பேசாதேபிரிவினையைப்பற்றி" —என்று அவர்களுக்கு வாய்ப்பூட்டு போடலாம். ஆனல் இதுவரையில் பேசாத மக்கள் அப்போது பேசுவார்கள்!

ஆகவே 'கர்மவீரன்' என்று யாரோ கிண்டலாக சொல்லி வைத்ததை உண்மையென நம்பி ஏமாந்து போனவனே! காலக்கிழவன் சொல்கிறேன்!—

"பொல்லாத சட்டங்கள் போடுவதன் மூலம் புனிதமான அந்த விடுதலைநோக்கங்களைப்பொசுக்கிவிடி முடியும் என்று தப்பிதமாகக் கணக்குப் போடாதே! அதோ பார்!—

"முத்துநிகர் தாயகத்தை முற்றுகையிட்டுவிட்ட மூடப் பகைவரின் மண்ணாசைக்கு முடிவு கட்டுவோம்" என்று முழக்கமிட்டுக் கொண்டிருக்கிற அந்த உத்தமர்களைப் பார்!

'சுந்தரத் திருநாட்டைச் சுற்றிவளைத்து சூறையாட எண்ணும் சூது மதியினரை—சூழ்ச்சி மனம் கொண்டவரை ஓட ஓட விரட்டுவோம்" என்று உரத்த குரலில் உணர்ச்சியைக் கொட்டும் அந்த உயர்ந்தவர்களைப் பார்!!

மண்ணாசைப் பிடித்த பகைவரை விரட்ட—மக்களைத் திரட்ட புயல் போலச் சுற்றித் தொண்டாற்றும் அந்தத் தூயவர்கள் கைமாறை எதிர்பார்த்தாக் கை கொடுக்க முன்வந்தார்கள்?

"ஒழிப்போம்! சட்டம் கொண்டு வருவோம்! என்று நீயும் உன் முன்னேடிகளும் உறுமியும், மிரட்டியும் பாதுகாப்புப் பணியில் தங்களை முழுக்க முழுக்க ஈடுபடுத்தி அல்லும் பகலும் அயராது ஒல்லும் வாயெல்லாம் ஓயாது பாடுபடும் அந்த நல்லவர்களைப் பார்!!

மதிவளம் கொண்ட தலைவனின் 'பின்னே மனவளம் கொண்ட இளைஞர்கள் ஆற்றும் மாண்புடைப் பணிகள் கண்டு மக்கள் கூட்டம் விழிகளை அகல விரித்து விம்முகிற இதயத்தே ஊறிப்பிறக்கும் மகிழ்ச்சியோடு வியந்து பாராட்டுவது உனக்குப் புரியவில்லையா?

அடிமைப்பட்டிருக்கிற இந்தப் பெரிய ஜன சமுதாயத்திற்கு வழிகாட்டி—வாழ்வு காட்டவல்ல இயக்கம்—அந்த விடுதலைப்படையைத் தவிர வேறேது? என்று மனதாரக் கருதும் மக்களிடமிருந்து 'விடுதலை நினைவை அகற்ற'ச் சட்டமா போடப்போகிறீர்கள்?

எங்கே ஓடுகிருய்? நில்!!

* * *

காமராசர் கனவிலிருந்து மீண்டார்! 'தடை வந்தாலும், பாதுகாப்புப் பணியில் தொடர்வோம்' என்ற அண்ணவின் அறிக்கையைத் தாங்கிய பத்திரிகைகள் அவருக்கு விரசமாகக் காட்சி தந்தன!

—ஃ—

திருவை ஆ. அண்ணமலை

அதுவல்ல எம் இலட்சியம்!

மேல் சபையில் ஒருநாள்

ஃ ஃ ஃ

கனம் அங்கத்தினர் திரு எம். ஜி, ராமச்சந்திரன் அவர்கள் "நாட்டுப் பிரிவினை கோர எங்களுக்கு உரிமை இருக்கிறது" என்ருர்கள். அதற்கு உரிமை கிடையாது. ஜனநாயகம் என்ருலும், சுதந்திரம் என்ருலும், எதற்குச் சுதந்திரம் இருக்க முடியும்? நாட்டைக் காட்டிக் கொடுக்க சுதந்திரம் உண்டா? நான் கேட்கிறேன். ஆங்கிலேயன் சொல்லாமல் போய்விட்டான். ஜெர்மனிக்காரனை, ஜப்பான்காரனை நாங்கள் அழைத்துக் கொண்டு வருகிருேம் என்ருல், அதற்கு சுதந்திரம் ஒட்டுரிமை உண்டா? அதை அனுமதிக்க முடியுமா? யாரும் அனுமதிக்க மாட்டார்கள்; எந்த நாடும் அனுமதிக்காது.

திரு எம். ஜி. ஆர்:— தலைவரவர்கள் மன்னிக்க வேண்டும். எந்தக் காலத்திலும் எங்களுடைய கட்சி இன்னெரு அன்னிய ஆட்சியை இங்கு கொண்டு வர வேண்டுமென்று கூறியதுமில்லை, கூறப் போவதுமில்லை; அந்த மாதிரியான கருத்து எங்களுக்குக் கிடையாது என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

கேள்வி பதில்

கே: ஆசிரியரண்ணு! தங்களுடைய இந்த ஆண்டு பொங்கல் மலரை எடுத்ததும் முகப்பில் சிவாஜி கணேசனின் பொங்கல் வாழ்த்துக்களைப் பார்த்தேன். ஏன் போட்டீர்கள்?

—சிங்கராசு

முதலிய தோழர்கள்

புதுக்கோட்டை.

ப; அது சிவாஜி பிலிம்சார் தந்த விளம்பரம்! அதுமட்டுமல்ல வெறுத்துக்கொண்டே போகும் சுபாவம் நாம் வளர்க்க விரும்பும் அன்புக்குத் தேவையில்லை! சிவாஜியைவிடக் கொடுமையானவர்களையே நாம் சகித்துக்கொள்ளும்போது அக்கலைஞன் மனமுவந்து வழங்கும் பொங்கல் வாழ்த்தைப் போடுவதால் என்ன வறு?

* * *

கே: கவர்னர் உரைக்கு இந்தத் தடவை சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் போகப் போகிறீர்களாமே?

தீனதயாளன்,

மயிலை.

ப: இந்த நெருக்கடியான நேரத்தில் அரசியல் பிரச்னைகளைப் பெரிதாக்கிக் கசப்பூட்டிக் கொண்டிருப்பதற்குப் பதில் எல்லோரும் சீனனை எதிர்க்கிறோம் என்று காட்ட வேண்டும் என்று தி. மு. க. முடிவெடுத்திருப்பதை அறிவீர்கள். அந்த முடிவையொட்டி, அநாவசியமான ஒரு பிரச்னையைக் கிளற வேண்டாம் என்று செல்ல விருக்கிறோம்!

* * *

கே: அரசியல் என்றால் என்ன?

குப்புசாமி,

பூதப்பாண்டி.

ப: இதை விளக்கி பெரிய கட்டுரையே எழுதலாம்! அரசியல் என்றால் அம்மிக்கல் போல ஒரே இடத்தில் இருப்பதல்ல. கொள்கையை அடைய பல வழிகளிலும் சென்று பயனை எப்படியாவது அடைந்து எண்ணியதைச் சாதிக்கும் ஒரு சாதனம்!

* * *

கே: கண்ணதாசன் எழுதுகின்ற வனவாசத்தைப பற்றி உங்கள் கருத்தென்ன ?

சீதாராமன்,

வேலூர்.

ப: நான் அதைப் படிப்பதில்லை. படித்தவர்கள் சொன்னதில் இருந்து தன்னைப்பற்றி அதிகம் எடை போட்டுக் கொண்டு எழுதுகிறார் என்று கருதுகிறேன்.

* *

கே: திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்காலம் எபபடியிருக்கும் ?

கிரன்,

ப்ரங்குடி.

ப: இந்த நாட்டின் அரசபீடத்தில் அமர்ந்து சிறப்பாக விளங்குவதாக இருக்கும்!

*

8-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க பலம்—இது, எதுவும் பலன் தரவில்லை!!

கடைசியில்

ராசாதிராசர்கள் எந்த அஸ்திரத்தைப் பெரிதாக மதித்தார்களோ,

சர்வாதிகார ஆசை கொண்டவர்கள் எதை வீசி மக்கள் குரலை மடக்க முயற்சித்தார்களோ,

எதனால் வளரும் குரலை ஒடுக்கிட முடியுமென்று அரச பீடத்தில் அமர்ந்திருந்த காரணத்தினாலே அரசாங்கத்தை நடாத்தும் கட்சி நினைக்குமோ,

அதனை,

அந்தச் சட்டம் கொணரும் முயற்சியை,

கடைசியில் நாடியிருக்கிறது காங்கிரஸ்!

வேறு வழியில்லை, நம்மாலே முடியாது, என்கிற எண்ணம் ஏற்பட்டுவிட்டது தமிழ்நாட்டுக் காங்கிரசுக்கு.

திராவிட முன்னேற்றக் கழகமும காங்கிரசும் நின்றால், மக்கள் கழகத்தையே மதிப்பார்கள், நம்மைப் போட்டு மிதிப்பார்கள் என்கிற அச்சம காங்கிரசுக்கு ஏற்பட்டுவிட்ட காரணத்தினாலேயே சட்டத்தின் முன்னால் சரணாகதி அடைந்திருக்கிறார்கள்.

காங்கிரசின் வீழ்ச்சியின் விளைவே இச் சட்டம்!

கழகத்தின் பலமான உருவத்தின் எதிரொலியே இச் சட்டம்!!

குறுகுறுத்த பார்வையுடன், குள்ள நரிபோல், தலையைக் குனிந்தபடிதான் உண்மையான காங்கிரஸ்காரர்கள் இதனை வெற்றி' யென்று சொல்ல முடியும்.

ஆனால், சாதாரணதுகளையும் சாமான்யர்களையும் கொண்ட ஏழைக கட்சியான நாம் நிமிர்ந்து பார்க்கிறோம்! மமதை மலைகளை தலைகுனியுமளவு கூச் செய்த பெருமை ஏழை மக்களாகிய நம்முடையது.

சட்டத்தைச் செய்தோமென்று காங்கிரஸ் கம்பீரமாகப் பார்க்கலாம்! ஆனால், எவ்வளவு பெரிய கட்சி, எவ்வளவு இறங்கிவிட்டது என்பதனையே அது காட்டும்!!

ஆனால், நம்முடைய நிலை அதுவல்ல. கண்களில் புதுஒளியோடு பூரிப்போடு, நம் பணியின் அளவு என்கிற பெருமிதத்தோடு நிமிர்ந்து நிற்கலாம்!!

—0—

பிரதி மாதமும் 1,2,3 தேதிகளில் சென்னை விஜயம்

வாலிபர்களுக்கு அறிவிப்பு

என் அருமை நண்பர்களே !

வாலிப பருவத்தில் சிலர், துர்நடத்தையுள்ளவர்களின் சேர்க்கையால் பலவித பழக்கங்களைக் கற்றுக்கொண்டு தங்கள் தேகத்திலுள்ள ஜீவ சக்தியை அடிக்கடி இழக்கச் செய்து, நாளடைவில் தேகம் இளைத்து கண்களின் பார்வை குறைந்து, உஷ்ணம் அதிகமாகி சொற்பனத்தில், சிறுநீரில் சக்தியை இழப்பது, தேகத்தில் வலி, இடுப்புவலி, ஞாபகமறதி, தைரியக்குறைவு இவைகள் ஏற்பட் மற்றவர்களிடமோ, பெற்றோர்களிடமோ சொல்ல வெட்கப்பட்டுககொண்டு, மணவாழ்க்கையை வெறுத்து மனதில் பற்பல எண்ணங்களை ஏற்படுத்தி அவதியுற்றுவருகிறார்கள். இவ்வியாதியை ஒன்றிரண்டு மாதங்களில் குணமாக்க எந்த வைத்தியத்தாலும் முடியாது. மருந்துகளை தொடர்ந்து சாப்பிட்டுதான் குணம்பெறவேண்டும.

உங்களுக்கு பூர்ண குணம் ஏற்படவேண்டுமானால், எங்கள் பிரக்யாதிப்பெற்ற கீழ்க்கண்ட அற்புதமான மருந்துகளை மாதம் 1 முறையாகத் தருவித்து சாப்பிட்டு குணம் தெரிந்து, தொடர்ந்து சாப்பிட்டு பூர்ண குணம் பெறலாம்.

(ஒப்பம்) டாக்டர் எஸ்-ஆர்-சிவராஜ் ஆர்- எம்-பி

1 இராஜாமிருதம் [லேகியம்] 2 இராஜ்பில்ஸ் [மாத்திரை]
3 தாமரை தைலம் (ஸ்நான தைலம்)
4 லேபனத்தைலம் (மேல்பூச்சு மருந்து) 1 மாதத்தில் இவை நான்கும் உபயோகப்படுத்தவேண்டும். 1 மாதத்துக்கு வேண்டிய 4 மருந்துகளும்;—
(தங்க பஸ்பம) கலந்த லேகியமும் மற்ற மருந்துகளும் சேர்ந்து ரூ. 33—00, (கால்சியம்) கலந்தது ரூ 23—00
(போஸ்டேஜ் ரூ 2—50 தனி)

விவரங்களுக்கு:—

சிவராஜ் சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
சிவதாபுரம் அஞ்சல் சேலம்-2

ஆசிரியரும் வெளியிடுபவரும் இராம. அரங்கண்ணல், ·-ஏ. டாக்டர் சர் சி. பி. ராமசாமிரோடு, அபிராமபுரம், சென்னை 18,
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லை அச்சகம் 8-40 மவுண்ட்ரோடு சென்னை-2